இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 27 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 19 – செவ்வாய்க்கிழமை 05 செப்டம்பர் 2023 – கோவை ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 27: Thiruvalluvar Year - 2054 - Aavani 19 - Tuesday 05 September 2023 - Kovai ★★ 16 Pages ₹5.00

## வேலூரில் கழகத்தின் பவளவிழா...

# வெற்றிக்கு அச்சாரமிடும் முப்பெரும் விழா!



## உங்களில் ஒருவன்

**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் கழகப் பவளவிழா – முப்பெரும் விழா அழைப்பு மடல்.**

கொட்டும் மழையில் சென்னை ராபின்சன் பூங்காவில் நடந்த பொதுக் கூட்டத்தில் திரண்டிருந்த ஆயிரமாயிரம் பொதுமக்கள் முன்பாக, “திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது” என்று அறிவித்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள். 1949-இல் அவர் உருவாக்கிய இயக்கம், அண்ணாவின் கொள்கைத் தம்பிகளால் வளர்க்கப்பட்டு, அவரது தம்பிகளில் தலையாய தம்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அரை நூற்றாண்டுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்டு, இன்று உங்களில் ஒருவனான என் தலைமையில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கிற வேளையில், கழகம் தனது 75-ஆம் ஆண்டில் பெருமிதத்துடன் அடியெடுத்து வைக்கிறது.

**ஒரு மாநிலக் கட்சி முக்கால் நூற்றாண்டு காலம் தன் மக்களின் நலன் காக்க உறுதியாகப் போராடியும், இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு மாநிலக் கட்சியால் அந்த மாநிலத்தில் மக்களின் பேராதரவுடன் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடிக்க முடியும் என்ற வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியும், இந்தியாவுக்கே முன்னோடியான பல திட்டங்களை வகுத்தும், சட்டங்களை உருவாக்கியும் இன்று இந்தியாவை வழிநடத்தக்கூடிய வகையில் தனக்கென தனித்துவமான இடத்தைப் பெற்றும் திகழ்கிறது என்றால் அந்தப் பெருமை நம் உயிராகவும், உதிரமாக வும் திகழ்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே உரியது. இந்த வரலாற்றுப் பெருமையில், உடன்பிறப்புகளாம் உங்கள் ஒவ்வொருவரின் பங்கும் அளப்பரியது.**

உங்களில் ஒருவனான நான் கழகத்தின் தலைவர் என்ற முறையிலும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற வகையிலும் மும்பையில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணியின் மூன்றாவது ஆலோசனைக் கூட்டத்தில் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட தலைவர்களால் வரவேற்கப்பட்டேன். ஜனநாயக விரோத - மக்கள் விரோத ஒன்றிய பா.ஜ.க அரசை யாரும் எதிர்த்து நிற்க முடியாது என்று இந்தியா கூட்டணியின் முதல் கூட்டத்தை பாட்னாவில் உருவாக்கியபோது ஏளனம் பேசினார்கள். ‘இது ஃபோட்டோ செஷன்’ என்று நகையாடினார் ஒன்றிய உள்துறை அமைச்சர். நகையாடியவர்களின் கண்களில் பயமாடுவதை பெங்களூரு நகரில் நடந்த இந்தியா கூட்டணியின் இரண்டாவது கூட்டத்தில் காண முடிந்தது. அதன் பிறகு, இந்தியா கூட்டணியின் மூன்றாவது கூட்டம் மும்பை மாநகரில் இரண்டு நாட்கள் நடைபெறும் என்றும் அதில் மேலும் பல கட்சிகள் இணையும் என்றும் அறிவிக்கப்பட்டபோது, பா.ஜ.க அரசின் பயத்தின் விளைவை சமையல் கேஸ் சிலிண்டர் விலைக் குறைப்பு நாடகம் அம்பலப்படுத்திவிட்டது.

**சென்னை மண்ணடி பவளக்காரத் தெரு, 7-ஆம் எண் வீட்டில் ஆலோசனை நடத்தப்பட்டு, ராயபுரம் ராபின்சன் பூங்கா பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட இயக்கம், தனது பவள விழாவைக் கொண்டாடும் ஆண்டில் இந்திய நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாகவும், சமூகநீதி - மாநில உரிமை - பன்முகத்தன்மை கொண்ட வகையில் இந்திய அரசியலைத் தீர்மானிக்கும் இயக்கமாகவும் திகழ்கிறது என்றால் இது தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி.**

**10 ஆண்டு காலமாக இந்தியாவை மதத்தின் பெயரால் பாழ்படுத்தி, கடும் விலையேற்றத்தால் மக்களை வதைத்து, அவரவர் தாய்மொழியையும் மாநில உரிமைகளையும் நசுக்கி, பன்முகத் தன்மை கொண்ட பண்பாட்டு உணர்வுகளை ஒடுக்கி, ஒரே நாடு - ஒரே மொழி - ஒரே தேர்தல் - ஒரே உணவு என்ற சர்வாதிகாரத்தனத்தை நிலைநிறுத்த முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக இந்தியா கூட்டணியில் இணைந்திருப்பவை அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, இந்தியாவின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகிற வாக்காளர்களும்தான்.**

இந்த ஒற்றுமை உணர்வை ஒரு முகப்படுத்தி, நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவது ஒன்றே, இந்திய ஒன்றியத்தைக் காப்பாற்றுவதற்கான வழி என்பதால் அதற்கான செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டு, அதனைச் செயல்படுத்துவதற்குப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றுத் தங்கள் பணியை மேற்கொள்கின்றனர். இந்திய அளவில் தவிர்க்க முடியாத இயக்கமாகத் திகழ்கிறது தி.மு.க எனும் பேரியக்கம்.

சென்னை மண்ணடி பவளக்காரத் தெரு, 7-ஆம் எண் வீட்டில் ஆலோசனை நடத்தப்பட்டு, ராயபுரம் ராபின்சன் பூங்கா பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட இயக்கம், தனது பவள விழாவைக் கொண்டாடும் ஆண்டில் இந்திய நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாகவும், சமூகநீதி - மாநில உரிமை - பன்முகத்தன்மை கொண்ட வகையில் இந்திய அரசியலைத் தீர்மானிக்கும் இயக்கமாகவும் திகழ்கிறது என்றால் இது தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி.

தந்தை பெரியாரின் இலட்சியங்களை மக்களிடம் கொண்டு சென்று, ஜனநாயக முறையில் அவற்றை நடைமுறைப் படுத்தத் தனி இயக்கம் கண்டவர் பேரறிஞர் அண்ணா. அந்த இலட்சியங்களை நிறைவேற்ற அண்ணாவுக்குத் துணையாகவும், அண்ணாவுக்குப் பிறகு கழகத்தின் தலைவராகவும் இருந்து நிறைவேற்றியவர் தலைவர் கலைஞர். அவர்களின் தொடர்ச்சியாக, உடன்பிறப்புகளாம் உங்களின் பேராதரவுடன் கழகத்தின் பயணம் உங்களில் ஒருவனான என் தலைமையில் தொடர்கிறது.

இலட்சியங்களை நிறைவேற்றும் போது, அவற்றுக்குத் தடையாக - எதிராக நிற்கின்ற கொள்கை எதிரிகளை அடையாளம் கண்டு ஜனநாயகக் களத்தில் வீழ்த்துவதே நம் முன் நிற்கும் முதன்மையான பணி. வெற்றி – தோல்விகளைக் கடந்து இலட்சியப் பாதையில் உறுதி குலையாமல் பயணிக்கின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். களத்தில் நாம் பெற்ற விழுப்புண்கள் அதிகம். கொடுத்த விலை இன்னும் அதிகம். ஆனால், எத்தனை நெருக்கடிகள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு, முதுகு வளையாமல், தரையில் தவழாமல், நெஞ்சை நிமிர்த்தி நின்று, ‘நான் தி.மு.க.காரன், நான் கலைஞரின் உடன்பிறப்பு’ என்று கம்பீரமாகச் சொல்கின்ற துணிவும் வலிவுமே கழகத்தினரின் அடையாளம்.

அந்த கம்பீரத்துடன், பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தனது 75-ஆவது ஆண்டினை - பவள விழாவினைக் கொண்டாட இருக்கிறது. அதுவும், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டில். இதைவிட என்ன மகிழ்ச்சி நமக்கு இருக்க முடியும்?

பெரியார் – அண்ணா – கழகம் பிறந்த செப்டம்பர் மாதத்தில் முப்பெரும் விழாவினைச் சிறப்பாக நடத்தி, கொள்கை முழக்கம் செய்யும் பல்வேறு நிகழ்ச்சிகளுடன், கழகத்திற்காகப் பாடுபட்ட இலட்சிய வீரர்களுக்கு விருதுகள் வழங்கி, சிறப்புரை ஆற்றுவது தலைவர் கலைஞர் உருவாக்கிய நடைமுறை - நன்முறை. இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களும் கழகத்தின் முன்னோடிகளும் தலைவர் கலைஞருக்கு உறுதுணையாக இருந்து முப்பெரும் விழா நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்துவார்கள். இளைஞரணி சார்பில் பெருமைமிகு பேரணிகளை நடத்தியதையும் மகிழ்ச்சியுடன் நினைவுகூர்கிறேன்.

**தலைவர் கலைஞரின் வழியில் இந்த ஆண்டும் கழகம் காத்த இலட்சிய வீரர்களுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பெரியார் விருது மயிலாடுதுறை திரு.சத்தியசீலன் அவர்களுக்கும், அண்ணா விருது மீஞ்சூர் திரு.க.சுந்தரம் அவர்களுக்கும், கலைஞர் விருது கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் - மாண்புமிகு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கும், பாவேந்தர் விருது தென்காசி திருமதி. மலிகா கதிரவன் அவர்களுக்கும், பேராசிரியர் விருது பெங்களூரு திரு. ந.இராமசாமி அவர்களுக்கும் செப்டம்பர் 17 அன்று தீரமிக்க வேலூர் மாநகரில் நடைபெறவுள்ள கழகத்தின் பவள விழாவுடன் கூடிய முப்பெரும் விழாவில் வழங்கப்படும். கழகத்தின் வளர்ச்சிக்காக சிறப்பாக பாடுபடும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களுக்கான விருது களும் முப்பெரும் விழாவில் வழங்கப்பட இருக்கின்றன.**



வீரம் செறிந்த வேலூரின் அடையாளமாக கோட்டை இருப்பதுடன், வேலூர் எப்போதும் தி.மு.கழகத்தின் கோட்டைதான் என்பதைப் பல்வேறு களங்களில் நிரூபித்திருக்கிறது. கழகப் பொதுச் செயலாளர் அன்பு அண்ணன் மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களை நமக்கு வழங்கியுள்ள கோட்டை. தனது மாணவப் பருவத்திலேயே மொழிப் போர்க் களம் கண்டு, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாக, அவரின் நிழலாக, கழகத்தின் வளர்ச்சிக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, கொள்கைத் தடம் மாறாமல் பயணிக்கின்ற பொதுச் செயலாளர் அவர்களின் தலைமையில் வேலூரில் முப்பெரும் திருவிழா - கழகப் பவள விழா நடைபெறுகிறது. விழாவிற்கான பணிகளை மாவட்டக் கழகச் செயலாளர் நந்தகுமார் அவர்களும் கழக நிர்வாகிகளும் இணைந்து சிறப்பாக மேற்கொண்டுள்ளனர்.

**கலைஞர் நூற்றாண்டு தொடக்கமும், கழகத்தின் பவள விழா தொடக்கமும் இணைந்த இந்த ஆண்டில், வேலூரில் நடைபெறவிருக்கும் முப்பெரும் விழாவிற்கு உடன்பிறப்புகளாம் உங்களை அழைப்பதில் உங்களில் ஒருவனான நான் அகம் மிக மகிழ்கிறேன். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றிக்கு அச்சாரமிடும் வேலூர் முப்பெரும் விழாவுக்கு கொள்கைப் படையாகத் திரண்டு வருக. கழகம் காப்போம் - மொழியைக் காப்போம் - மாநில உரிமை காப்போம் - மக்கள் வாழும் வகையில் நாட்டைக் காப்போம் என்ற உறுதியைத் தருக.**

நாற்பதும் நமதே - நாடும் நமதே என்ற இலக்கை அடைந்திடச் சூளுரைக்கும் விழாவாக வேலூர் முப்பெரும் விழா அமையட்டும். அடுத்த ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவும் - கழகப் பவள விழா நிறைவும் வெற்றிக் கொண்டாட்டங்களாக மலரட்டும்.

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2054,
ஆவணி 17,
03.09.2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 05-09-2023

# மும்பையில் முழு வெற்றி!

பாட்னாவில் கருவாகி –

பெங்களூரில் உருவாகி –

மும்பையில்திருவாகி இருக்கிறது 'இந்தியா' கூட்டணி. இது பா.ஜ.க.வுக்கும் குறிப்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கும் எத்தகைய கலக்கத்தை உருவாக்கி இருக்கிறது என்பதற்கு உதாரணம்தான் – சிலிண்டர் விலையை 200 ரூபாய் குறைத்தது ஆகும். இந்தியா கூட்டணிக் கூட்டம் நடக்க நடக்க ... சிலிண்டரின் மொத்த விலையே 200 தான் என்கிற அளவுக்கு பிரதமர் குறைத்தாலும் குறைத்துவிடுவார்.

**மும்பை கூட்டமானது முழு வெற்றியாக அமைந்திருப்பதால்தான் அதனை திசை திருப்புவதற்காக – 'ஒரே நாடு – ஒரே தேர்தல்' என்ற குழப்பக் கொள்கையை கையில் எடுத்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. இதன் மூலமாக ஒன்று சேர்ந்துள்ள எதிர்க்கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்படுத்தலாமா என்று பார்க்கிறார் அவர். 'இந்தியா' கூட்டணி மிகத் தெளிவாக இருக்கிறது. 'பா.ஜ.க.வை வீழ்த்துவது ஒன்றே இலக்கு' என்பதில் அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். அந்த ஒற்றை முழக்கத்தைத் தவிர வேறு எதையும் அவர்கள் கையில் எடுக்கவில்லை.**

இதனை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மும்பைக் கூட்டத்திலேயே தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். **"எதிர்க்கட்சிகள் ஒன்று சேர மாட்டார்கள் என்று நினைத்தது பா.ஜ.க. ஒரே கூட்டத்தில் பிரிந்து விடுவார்கள் என நினைத்தார்கள். கூட்டணியாக இணைந்து – அதற்கு பெயரும் சூட்டி மூன்றாவது ஆலோசனைக் கூட்டத்தை நடத்திவிட்டோம் என்பது நமது பக்குவத்தை மட்டுமல்ல நம்முடைய உறுதியையும் காட்டுகிறது.**

**இத்தகைய உறுதியுடன் செயல்பட்டு வரும் அகில இந்தியக் கட்சித் தலைவர்கள் – மாநிலக் கட்சியின் தலைவர்கள் – மாநில முதலமைச்சர்கள் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெற்றிப் பாதையில் நாம் பயணித்து வருகிறோம் என்பதன் அடையாளம் இது" என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதே கருத்தைத்தான் அனைத்துத் தலைவர்களும் எதிரொலித்தார்கள்.**

**"இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றுவது என்ற ஒற்றை இலக்கின் முன்பு, நிச்சயமாக பா.ஜ.க. தோற்கடிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை" என்றார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். ஆம்! என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறது மும்பை கூட்டம்.**

14 உறுப்பினர்கள் கொண்ட ஒருங்கிணைப்பு மற்றும் தேர்தல் வியூகக் குழு அமைக்கப்பட்டு விட்டது. இதேபோல் பிரச்சாரக் குழு, பத்திரிகையாளர்கள் குழு, சமூக ஊடகக் குழு, ஆய்வுக் குழு ஆகிய குழுக்களும் அமைக்கப்பட்டு விட்டன. தொகுதிப் பங்கீடுகளைத் தொடங்கி விடுங்கள் என்றும் 'இந்தியா' கூட்டணி அறிவித்துள்ளது.

**"இந்தியா கூட்டணிக் கட்சிகளான நாங்கள் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் முடிந்தவரை ஒன்றாகப் போட்டியிட முடிவு செய்திருக்கிறோம். பல்வேறு மாநிலங்களில் தொகுதி பங்கீடு ஏற்பாடுகள் உடனடியாக தொடங்கப்படும்" என்பது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. 'எல்லா இடங்களிலும் பா.ஜ.க.வுக்கு எதிராக இருமுனைப் போட்டியை உருவாக்க முடிவு செய்துள்ளோம்' என்று சொல்லி இருக்கிறார் உத்தவ் தாக்கரே. மூன்றாவது அணியை உருவாக்க நினைத்தது பா.ஜ.க. அதற்கு முற்றுப்புள்ளி வைத்து, இரண்டு அணிகளோடு நிறுத்த வைத்ததுதான் தி.மு.க. தலைவரின் மகத்தான சாதனை ஆகும்.**

பாட்னாவில் 19 கட்சிகளின் அணிச்சேர்க்கையாக இருந்தது. பெங்களூருவில் 26 கட்சிகளின் இணைப்பாக வளர்ந்தது. மும்பையில் 28 கட்சிகளாக வளர்ந்து வருகிறது. இன்னும் பல கட்சிகள் வரலாம். காங்கிரஸையும் உள்ளடக்கிய அணிச்சேர்க்கைதான் வெற்றிகரமாக அமையும் என்பதை தொடர்ந்து சொல்லி வந்தவர் தி.மு.க. தலைவர் அவர்கள்.

**"நாங்கள் எடுத்துள்ள முடிவுகள் பா.ஜ.க.வை வீழ்த்துவதை உறுதி செய்துள்ளது. ஒருங்கிணைப்புக் குழுவை நாங்கள் அமைத்துள்ளது இதனை உறுதி செய்துள்ளது. இந்தியா கூட்டணி நிச்சயமாக பா.ஜ.க.வை வீழ்த்தும்" என்றார் ராகுல் காந்தி. "இந்திய மக்களின் 60 சதவிகிதத்தை நாங்கள் பிரதிபலிக்கிறோம்" என்றும் ராகுல் சொன்னார். "தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படலாம். நாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்த கூட்டத்தின் நோக்கம் மத்தியில் உள்ளவர்களை வெளியேற்ற வேண்டும் என்பதுதான். நாங்கள் ஒன்றாக இருக்கிறோம். வரலாற்றை மாற்றி எழுத பா.ஜ.க.வை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என்று திட்டவட்டமாகச் சொல்லி இருக்கிறார் பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார். "நாங்கள் அமைத்திருப்பது சில கட்சிகளின் கூட்டணி அல்ல. புதிய இந்தியாவை உருவாக்க விரும்பும் 140 கோடி மக்களின் கூட்டணி ஆகும்" என்று சொன்னார் ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால்.**

"நாங்கள் ஒருபோதும் தவறு செய்ய மாட்டோம்" என்று உறுதி அளித்திருக்கிறார் சரத்பவார். நரேந்திர மோடி – அமித்ஷா – நிதின் கட்கரி – யோகி ஆதித்யநாத் – மோகன் பகவத் என பா.ஜ.க.தான் பல கோஷ்டிகளாகக் கலகலகத்துப் போயிருக்கிறதே தவிர 'இந்தியா' கூட்டணி அல்ல. 'இந்தியா' கூட்டணியை வழிநடத்துவது தனி மனிதர்களல்ல, தத்துவங்கள் ஆகும். பா.ஜ.க., மோடி என்ற ஒற்றை முகத்தைக் காட்டி வெற்றி பெற நினைக்கிறது. அந்த முகத்தின் சாயம் வெளுத்துவிட்டது. ஆனால், இந்தியா கூட்டணியானது பல்வேறு தத்துவங்களை முன்னிலைப்படுத்துகிறது. இந்த தத்துவங்கள் வெல்லும் தத்துவங்களாக அமைந்துள்ளன. இவை காலம் காலமாக இந்தியாவைக் காப்பாற்றி வந்த தத்துவங்கள் ஆகும்.

'இந்தியா' கூட்டணியை வெற்றி பெற வைப்பதன் மூலமாக இந்த தத்துவங்களைக் காக்கலாம். இந்த தத்துவங்களை காப்பாற்றுவதன் மூலமாக இந்தியாவைக் காப்பாற்றலாம். இந்த ஒற்றை நோக்கத்தை கூர்மையாக்கியதன் மூலமாக மும்பை கூட்டமானது முழு வெற்றியை ஈட்டித் தந்துள்ளது.

## 'கலைஞர் 100' – கழக மகளிர் அணி சார்பில் செப். 15–ல்

# வினாடி – வினா போட்டிக்குத் தயாராகுங்கள்!

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!




**சென்னை, செப்.5-**

**தலைவர்- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைத்தள வீடியோ பதிவில், "கழக மகளிர் அணி சார்பில் தங்கை கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னெடுப்பில் செப்.15 அன்று நடைபெறும். "கலைஞர் 100- வினாடி வினா" போட்டிக்கு அனைவரும் தயாராகுங்கள்" என்று அன்பழைப்பு விடுத்துள்ளார்.**

கழகத் தலைவர் – முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பக்கத்தில் வீடியோ மூலம் விடுத்த அன்பழைப்பு வருமாறு:-

தமிழ் இனத்தின் அறிவொளியாக, தன்னிகரில்லா ஆளுமையாக வாழ்ந்து வழிகாட்டிய தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில், திராவிட இயக்கத்தை, தமிழ்நாடு என்னும் பெரும் நிலத்தை, தமிழ் இன வரலாற்றை அனைவரும் அறிந்திடும் வண்ணம், நம் கழக துணைப் பொதுச்செயலாளர் தங்கை கனிமொழி எம்.பி. அவர்களது முன்னெடுப்பில் "கலைஞர் -100" – வினாடி – வினா போட்டி, கழக மகளிர் அணிச் சார்பில் நடைபெறவிருக்கிறது.

நமது முந்தைய களப் போராட்டங்களை, அரசியல் புரட்சிகளை அதற்கு வித்திட்ட நம் முன்னோடிகளை, நம் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துக் கூறவும் இந்த "வினாடி – வினா" போட்டி பெரும் வாய்ப்பாக அமையும்!

10 ஆயிரம் கேள்விகளோடு 18 வயதுக் குட்பட்டவர்கள் மற்றும் 18 வயதுக்கு மேலானவர்களுக்கு – என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மூன்று சுற்றுகளாக நடைபெறும்.

இந்த வினாடி – வினா போட்டியில் எல்லோரும் கலந்துகொண்டு தங்களின் அறிவுத் திறனை வெளிப்படுத்தலாம்.

www.Kalaignar100.co.in என்ற இணைய தளத்தில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான வருகிற செப்டம்பர் 15 அன்று இணைய வழிப் போட்டிகள் தொடங்கவிருக்கின்றன!

வரலாற்றின் தனிப்பெரும் மக்கள் இயக்கத்தை இணையில்லா நம் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில் கொண்டாடுவோம்! வாருங்கள்!!

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பக்கத்தில் வீடியோ மூலம் அன்பழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில் இதுகுறித்து கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில் கழக மகளிரணி சார்பில் தங்கை கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னெடுக்கும் - கலைஞர் 100- வினாடி - வினா போட்டி முயற்சி பாராட்டத்தக்கது.**

**செப்டம்பர் 15-ஆம் நாள் தொடங்கவுள்ள உள்ள - Kalaignar100quiz வினாடி-வினா போட்டிக்கு இப்போதில் இருந்தே தயாராகுங்கள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா தலைமையில்

# பருவமழையை எதிர்கொள்ளல் - வெள்ளத்தடுப்புப் பணிகள் ஆய்வு!

*சென்னை, செப். 5 -*

*தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தலைமையில் வெள்ளத்தடுப்பு நடவடிக்கை குறித்து மற்றும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் தொடர்பாக ஆய்வு கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

*இக்கூட்டத்தில் பல்வேறு துறைகள் மூலம் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மற்றும் வெள்ளத் தடுப்பு நடவடிக்கை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.*

*இக்கூட்டத்தில் சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளின் தற்போதைய உண்மை நிலை குறித்து ஒரு பிரத்யோக குழு மூலம் 45 இடங்களில் பெற்ற தகவல்கள் ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வில் விடுபட்ட இடங்களில் மழைநீர் வடிகால் பணிகளை துரிதப்படுத்துதல், தடுப்பரண் (BARRICADE) அமைத்தல், மின் சார கம்பங்கள் மாற்றியமைத்தல், குடிநீர் குழாய் மாற்றியமைத்தல் ஆகிய பணிகள் மொத்தம் 45 இடங்களில் நிலை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டு இவ்விடங்களில் பணிகளை விரைவாக முடிக்குமாறு தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தினார்.*

*நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் நெடுஞ்சாலைகள் துறை முலம் ரூ.85 கோடி மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி மற்றும் ஆவடி மாநகராட்சி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் அனைத்தும் 15.10.2023க்குள் முடிக்கப்படும் என்று தெரிவித்தார்.*

*மேலும், அண்ணாசாலை மற்றும் ஈ.வெ.ரா பெரியார் சாலையில் SILT CATCH PIT அமைக்கும் பணிகளும் ஒரு மாத காலத்திற்குள் முடிக்கப்படும். தலைமைச் செயலாளர் அவர்கள் நெடுஞ்சாலை துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து மழைநீர் வடிகால் பணிகள் பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியில் 17 கல்வெட்டு தூர்வாரும் பணி மற்றும் அனைத்து மழைநீர் வடிகால்களையும் தூர்வாரும் பணியினை செப்டம்பர் மாதம் இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.*

*நீர்வள ஆதார துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் நீர்வள ஆதார துறையினால் பருவ மழை முன்னெச்சரிக்கை ஆயத்தப் பணிகள் 77 பணிகள் (51 பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதி, 26 பணிகள் தாம்பரம் மாநகராட்சி மற்றும் ஆவடி மாநகராட்சி பகுதிகளில்) ரூ.186 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து மழைநீர் வடிகால் பணிகளும் செப்டம்பர் மாதம் இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.*

*மேலும் ரூ.250 கோடி மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்பு பணிகள் அனைத்தும் மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களில் செப்டம்பர் மாதம் இறுதிக்குள் முடிக்கப்படும் என்று அறிவுறுத்தினார்கள்.*

*2023-2024-ஆம் ஆண்டு இறுதியில் 15 இடங்களில் ரூ.230 கோடி மதிப்பீட்டில் தணிகாச்சலம் கால்வாய் மற்றும் மாதவரம் டேங்க் மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களில் செப்டம்பர் மாதம் இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.*

*பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் குறித்து தலைமைச் செயலாளர் ஆய்வு செய்தார். அவ்வை சண்முகம் சாலையில் ஒப்பந்ததாரர் மழைநீர் வடிகால் பணி மெதுவாக செய்வதினால், அவருக்கு அபராதம் விதிக்குமாறும், தாக்கீது அளிக்குமாறும் கூறினார்கள்.*

*பராக்கா சாலையில் தற்போது மந்த நிலையில் பணி நடைபெற்று வருவதால், இப்பணியினை வேறு ஒரு ஒப்பந்ததாரர் முலமும் மேற்கொண்டு விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.*

*பீட்டர்ஸ் சாலை இரண்டாவது தொடர்ச்சி விரைவில் தொடங்கப்பட வேண்டும். புஸ்பவதி கால்வாயின் மேல் தளத்தை உடைத்து தூர்வாரும் பணியை விரைந்து முடிவெடுக்க வேண்டும். மாதா கோயில் தெரு இராஜீவ்காந்தி நகர் ஒப்பந்ததாரருக்கு மந்தகதி பணிக்காக தாக்கீது வழங்கப்பட வேண்டும். திருவள்ளுவர் நகர் நீர் மட்டத்தை ஆய்வு செய்து அடுத்த கள ஆய்வில் பணி பார்வையிடப்பட வேண்டும். SILT CATCH PIT அமைக்கும் பணி வேகமாக நடைபெற வேண்டும். ADB மற்றும் KFW நிதியில் மேற்கொள்ளப்படும் பணிகளில் நீர் வடியும் இடம் சரியாக இருக்க வேண்டும். அனைத்து மழைநீர் வடிகால் பணிகளும் 30.09.2023க்குள் முடிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.*

*தாம்பரம் மாநகராட்சியில் இராமன் தெரு மற்றும் சிட்லப்பாக்கம் பகுதிகளில் நடைபெறும் மழைநீர் வடிகால் பணிகளை விரைவில் முடிக்குமாறு அறிவுறுத்தினார். தடுப்பரண் (BARRICADE) அமைத்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் SILT CATCH PIT அமைக்கும் பணிகளையும் 30.09.2023க்குள் முடிக்க அறிவுறுத்தினார்.*

*ஆவடி மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை விரைவில் முடிக்குமாறும் அறிவுறுத்தினார்.*

*சென்னை மெட்ரோ இரயில் பணிகள் நடைபெறும் இடங்களான, வடபழனி ஆற்காடு சாலை, வளசரவாக்கம் பகுதிகளில் மழைநீர் தேங்கா வண்ணம் இருக்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்கள். காளியம்மன் கோவில் தெருவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி மற்றும் பனகல் பூங்காவில் கீழ்நிலை நீர் தொட்டி அமைக்கும் பணிகளையும் விரைவில் முடிக்குமாறும் அறிவுறுத்தினார்.*

*போட் கிளப் சாலையில் மெட்ரோ இரயில் நிலையம் அமையவுள்ள பகுதியில் கைடுவால் அமைத்து மழைநீர் செல்ல வழிவகை செய்யுமாறு அறிவுறுத்தினார்.*

*சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் எதிரில், ஜி.எஸ்.டி சாலையில் மழைநீர் வடிகால் அமைக்க நெடுஞ்சாலைத்துறை அனுமதி பெற்று 45 நாட்களுக்குள் பணியினை முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.*

*இறுதியாக பெருநகர சென்னை மாநகராட்சி, ஆவடி மாநகராட்சி மற்றும் தாம்பரம் மாநகராட்சி பகுதிகளுக்காக பிரத்யோகமாக நியமிக்கப்பட்ட இந்திய ஆட்சிப்பணி கண்காணிப்பு அலுவலர்கள் தொடர்ந்துகள ஆய்வு செய்து பல்வேறு துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி பருவ மழையை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும் எனவும் தலைமைச் செயலாளர் அறிவுறுத்தினார்.*



கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடந்த பொதுக் கூட்டத்தில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ராஜகண்ணப்பன், மாநகர செயலாளர் மதிவாணன், பகுதி செயலாளர் டி.பி.எஸ்.எஸ். ராஜ் முகமது ஆகியோர் வழங்கினர். இக்கூட்டத்தில் மாநகரச் செயலாளர் மதிவாணன், துணை மேயர் திவ்யா, பகுதி கழகச் செயலாளர் ஏ.எம்.ஜி விஜயகுமார், மோகன், ஆர்.ஜி. பாபு, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் செங்குட்டுவன், லீலா வேலு, நூர்கான், பொன் செல்லையா, சரோஜினி வெங்கட்ராஜ், வட்ட செயலாளர்கள் எடிங்டன், கோவிந்தராஜ் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முன்னதாக மாவட்ட அயலக அணி அமைப்பாளர் அடைக்கலராஜா வரவேற்புரை ஆற்றினார் .

## அதிபராகும் நோக்கில் மோடியின் சர்வாதிகாரப் போக்கு!

# ஒரே நாடு - ஒரே தேர்தல் சதித் திட்டம்!

## வடசென்னை ந.மனோகரன் இல்ல மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, செப். 5-**
**அதிபராகும் நோக்கில் செயல்படும் மோடியின் சர்வாதிகாரப் போக்கு தான் ஒரே நாடு - ஒரே தேர்தல் எனும் சதித் திட்டம் என வடசென்னை ந.மனோகரன் இல்ல மணவிழாவில் மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரிக்கை விடுத்தார்!**

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (03.09.2023) காலை, சென்னையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழு உறுப்பினர் ந.மனோகரன் இல்லத் திருமண விழாவுக்குத் தலைமையேற்று நடத்தி வைத்து ஆற்றிய உரை வருமாறு:

நம்முடைய தலைமைச் செயற்குழு உறுப்பினர் அருமை சகோதரர் மனோகரன் அவர்களது இல்லத்தில் நடைபெறும் இந்த மண விழா நிகழ்ச்சியில் பங்கேற்பதில், அதிலும் இந்த மணவிழா நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று மணவிழாவை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தும் ஒரு சிறப்பான வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன்.



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.9.2023) சென்னையில், கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் மனோகரன் அவர்களின் மகன் மகேஷ்குமார் – ரம்யா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இளையஅருணா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஜே.ஜே. எபிநேசர், ஐட்ரீம் ஆர். மூர்த்தி, கே.பி.சங்கர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் ஆகியோர் உள்ளனர்.

### சகோதரர் மனோகரன் இல்ல விழாக்களில் பங்கேற்பது மகிழ்ச்சி!

இன்றைக்கு நடைபெறும் இந்த திருமணத்திற்கு நான் தலைமையேற்று வாழ்த்த வந்திருக்கிறேன் என்று சொன்னால், ஏதோ மனோகரன் இல்லத்தில் நடைபெறும் முதல் திருமணம் மட்டுமல்ல இது, ஏற்கனவே இரண்டு திருமணங்களை, அவரே இங்கே சொன்னது போல நடத்தி வைத்திருக்கிறேன்.

அவருடைய மகளுக்கு 2017-ஆம் ஆண்டு நடைபெற்ற திருமணத்தை நான் தான் நடத்தி வைத்தேன். அதற்கு பின்பு 2018-ஆம் ஆண்டு அவருடைய மகனுக்கு நடைபெற்ற திருமணத்தையும் நான்தான் தலைமையேற்று நடத்தி வைத்திருக்கிறேன். இன்றைக்கு அவருடைய மகனுக்கு நடைபெறும் திருமணத்தையும் நான்தான் தலைமையேற்று நடத்தி வைத்திருக்கிறேன். இன்னும் ஏதாவது மகன்கள், மகள்கள் இருந்தாலும் அதற்கும் நான்தான் வருவேன். நல்லவேளை மகன்கள், மகள்கள் இல்லை. பேரன்கள்தான் இருக்கிறார்கள். நிச்சயம் உறுதியாக அந்தப் பேரன்களுக்கும் நான் தான் திருமணத்தை நடத்தி வைப்பேன். எனவே உங்களோடு சேர்ந்து மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை நானும் வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நம்முடைய பொருளாளர் டி.ஆர். பாலு அவர்கள் சொன்னதுபோல, அவருடைய தந்தை மெட்டல் பாக்ஸ் நடராஜன் அவர்கள், இந்த வட்டாரத்தில் - இந்தப் பகுதியில் - இந்த மாவட்டத்தில் கழகத்தின் தளபதியாக விளங்கியவர். மெட்டல் பாக்ஸ் நடராஜனை இந்தப் பகுதியில் இருப்பவர்கள், கட்சிக்காரர்கள், கட்சிக்காரர்கள் மட்டுமல்ல எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், கட்சியைத் தாண்டி இருப்பவர்களாக இருந்தாலும் அவரைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். எனவே அந்த அளவிற்கு ஒரு சிறப்பான பெயரை பெற்றவராக - மக்கள் தொண்டாற்றுபவராக கட்சிக்கு தொண்டாற்றுபவராக விளங்கியவர்.

### அண்ணா காலத்திலிருந்து கழகத்திற்கு பாடுபட்ட மெட்டல் பாக்ஸ் நடராஜன்!

அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கிய காலத்தில் இருந்து மெட்டல் பாக்ஸ் நடராஜன் அவர்கள் இந்த இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு பல்வேறு பொறுப்புகளில் இருந்து அவர் பணியாற்றி இருக்கிறார்.

அதைத் தொடர்ந்து அவரைப் போலவே அவருடைய மகன் மனோகரன் அவர்கள் 1984-இல் இளைஞர் அணியில் வட்ட அமைப்பாளராக பொறுப்பேற்று அவர் பணியாற்றி இருக்கிறார். அதற்கு பின்பு 172-ஆவது வட்டமாக இருந்த வட்டக் கிளையில் அவைத் தலைவராக இருந்தும் பணியாற்றி இருக்கிறார்.

இடையில்தான் கொஞ்சம் அவரைக் காணவில்லை. பாலு சொன்னதுபோன்று காணாமல் போய்விடவில்லை. ஒதுங்கி இருந்தார். ஏதோ தனிப்பட்ட காரணமோ அல்லது சூழல் காரணமோ – ஏதோ நிலையில் ஒதுங்கி இருந்தாலும், ஆனால் உடனடியாக நம்மிடத்தில் வந்து விட்டார்.

நான் இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன், அவர் எப்படி நம்மைவிட்டு கொஞ்ச நாள் ஒதுங்கி இருந்தாலும் அதன்பின் நம்மிடம் வந்து எப்படி சேர்ந்தார் என்பதைப் பற்றி நினைத்துப் பார்க்கிறபோது, 2013-ஆம் ஆண்டு இங்கு நம்முடைய கழகத்தில் இருக்கும் ஒரு முன்னோடி மறைவெய்திய செய்தியை கேட்டு அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக நான் வந்திருந்தேன். நான் நடந்து வந்தபோது அவர் கடை வழியாகப் போகிறபோது, அவர் கடையில் உட்கார்ந்து இருக்கிறார். “என்ன மனோகரன் நன்றாக இருக்கிறீர்களா?” என்று கேட்டு நான் உள்ளே சென்று விட்டேன். அன்றைக்கே தி.மு.க.வில் வந்து உடனே சேர்ந்து விட்டார். அதைத்தான் இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன்.

> **‘இந்தியா’ என்று சொன்னாலே இன்றைக்கு நிறைய பேருக்கு பயம் ஆகிவிட்டது. அதிலும் பாரதீய ஜனதா கட்சிக்கு அச்சமே ஏற்பட்டிருக்கிறது. இந்தியா என்ற பெயரைச் சொல்வதற்கே கூச்சப்படுகிறார்கள், அச்சப்படுகிறார்கள்.**

### சுற்றுப்பயணங்களில் எனக்கு பாதுகாவலராக வந்த மனோகரன்!

அது மட்டும் அல்ல, தொடக்க காலத்தில் இளைஞரணி தொடங்கிய நேரத்தில் நான் எங்காவது சுற்றுப்பயணம் செய்கிறேன் என்று சொன்னால் சென்னையில் மட்டுமல்ல, வெளியூருக்கு எங்காவது செல்கிறேன் என்று சொன்னால் எனக்குப் பாதுகாவலராக வந்தவர்தான் நம்முடைய மனோகரன் அவர்கள். எப்படி அன்றைக்கு பாதுகாவலராக இருந்து எனக்கு அந்தப் பணியை தொடங்கினாரோ, இன்றைக்கும் எனக்கு மட்டுமல்ல, கழகத்துக்கும் பாதுகாவலராக இருந்து தன்னுடைய கடமையை அவர் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். எனவே அவருடைய இல்லத்தில் அவருடைய மகனுக்கு நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சட்டதிட்டக் குழு உறுப்பினராக, அதற்குப் பின்னால் செயற்குழு உறுப்பினராக இருந்து தன்னுடைய கடமையை அவர் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

### யார் காலிலும் விழுந்து, தவழாமல் செயல்படும் கொள்கைக் குடும்பம்!

அவர் மட்டுமல்ல, அவருடைய மகன் - மணமகனாக வீற்றிருக்கும் மகேஷ் குமார் அவர்களும் இன்றைக்கு மாணவரணியில் மாவட்டத் துணை அமைப்பாளராக இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இதைப் பார்த்தவுடனே கழகமே குடும்பம், வாரிசு... வாரிசு என்று பேசுவார்கள். கழகம்தான் குடும்பம், குடும்பம்தான் கழகம். அதில் எந்த மாற்றமும் கிடையாது. ஆனால் அதே நேரத்தில் கொள்கைக் குடும்பமாக இருக்கிறோமா இல்லையா என்பதுதான் முக்கியம். யார் காலிலும் பாதத்திலும் விழுந்து வளர்ந்த குடும்பம் அல்ல இது. தவழ்ந்து சென்று வளர்ந்த குடும்பம் அல்ல இது. இலட்சியக் குடும்பமாக, ஒரு கொள்கைக் குடும்பமாக, மெட்டல் பாக்ஸ் நடராஜனில் இருந்து- மனோகரனில் இருந்து - இன்றைக்கு அவருடைய மகனாக இருப்பவர்கள் எல்லாம் இன்றைக்கு நம்முடைய இயக்கத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னால், இதுதான் அண்ணா அவர்கள் உருவாக்கிய இயக்கம், அண்ணா அவர்கள் ஒரு குடும்பப் பாச உணர்வோடு இந்த இயக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் இது சிலருக்கு இன்றைக்கு வயிற்றெரிச்சலாக இருக்கிறது. அதில் என்னென்ன பேசுகிறார் என்பதை எல்லாம் நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. அதைப்பற்றி நாம் கவலையும் படவில்லை.

## பா.ஜ.க.வின் திட்டத்தை ஆதரித்து பலிகடா ஆகப்போகும் அ.தி.மு.க.!

### இந்தியாவை காப்பாற்ற வேண்டிய அவசியம் இன்றைக்கு இருக்கிறது!

இன்றைக்கு நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் நிலையை நீங்கள் எல்லாம் உணர்ந்து பார்க்க வேண்டும். எவ்வாறு சட்டமன்றத்தில் தேர்தல் நடந்தபோது தமிழ்நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வோடு நீங்கள் எல்லாம் ஒரு சிறப்பான வெற்றியைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு - நம்முடைய கூட்டணிக்கு ஏற்படுத்திக் கொடுத்தீர்களோ, அதே போல் இந்தியாவைக் காப்பாற்றுவதற்கு ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நான் பலமுறை சொல்லி இருக்கிறேன், யார் பிரதமராக வரவேண்டும்? யார் ஆட்சிக்கு வரவேண்டும்? என்பதல்ல; யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதுதான் நம்முடைய இலட்சியமாக - நோக்கமாக இருக்க வேண்டும்.

## சி.ஏ.ஜி. அறிக்கைக்கு இதுவரை பிரதமர் மோடி பதிலளிக்காதது ஏன்?

எனவே இந்தியா என்று சொன்னாலே இன்றைக்கு நிறைய பேருக்கு பயம் ஆகிவிட்டது. அதிலும் பாரதீய ஜனதா கட்சிக்கு அச்சமே ஏற்பட்டிருக்கிறது. இந்தியா என்ற பெயரைச் சொல்வதற்கே கூச்சப்படுகிறார்கள், அச்சப்படுகிறார்கள்.

### ‘இந்தியா’ கூட்டணியின் பெயரைக்கண்டு அஞ்சி நடுங்கும் பா.ஜ.க.!

**இந்தியா கூட்டணி அமைத்து முதன் முதலில் பீகார் மாநிலத்தில் நிதீஷ்குமார் அவர்கள், பா.ஜ.க. ஆட்சிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவில் இருக்கும் எதிர்க்கட்சிகளை எல்லாம் ஒன்று திரட்டி பாட்னாவில் ஒரு கூட்டத்தை நடத்தி, அதில் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும் என்று உறுதி எடுத்தோம். அதற்கு பின்னால் கர்நாடக மாநிலம் பெங்களூருவில் மீண்டும் இரண்டாவது முறையாகக் கூடி இந்தக் கூட்டணிக்கு ‘இந்தியா’ என்ற பெயரைத் தேர்ந்தெடுத்து, அதை அறிவித்து, அதற்குப் பிறகு மராட்டிய மாநிலம் மும்பையில் மூன்றாவது கூட்டத்தை நடத்தி, நம்முடைய கூட்டங்கள் எப்படி செயல்பட வேண்டும், அப்படி செயல்படுவதற்கு என்னென்ன அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும், தேர்தல் களத்தில் நாம் எப்படி ஈடுபட வேண்டும், பிரச்சாரத்தை எப்படி நடத்த வேண்டும், எப்படி எல்லாம் நம்முடைய பணி அமைந்திட வேண்டும் என்பதற்காக அதற்கென்று சில குழுக்கள் எல்லாம்கூட அமைக்கப்பட்டு வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறோம்.**

### அவசரமாக நாடாளுமன்றக் கூட்டத்தை கூட்ட வேண்டிய அவசியம் என்ன?

எனவே இதையெல்லாம் பார்த்து அஞ்சி, நடுங்கி இன்றைக்கு பா.ஜ.க. என்ன செய்திருக்கிறது என்று சொன்னால் திடீரென்று நாடாளுமன்றத்தைக் கூட்டப் போகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டிய அவசியம் இன்றைக்கு எதற்காக அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், ‘ஒரே நாடு - ஒரே தேர்தல்‘ என்ற ஒரு நிலையை ஏற்படுத்துவதற்காக சில முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிறது.

**அந்த ஒரே நாடு - ஒரே தேர்தலை எப்படி செயல்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவிற்கு யார் தலைவர் என்றால், இந்திய நாட்டின் முன்னாள் ஜனாதிபதி. இந்திய நாட்டின் முதல் குடிமகன் என்று சொல்கிறோம் அல்லவா, அந்த ஜனாதிபதி பொறுப்பில் இருந்தவரைத் தலைவராக போட்டிருக்கிறார்கள். இந்திய நாட்டின் ஜனாதிபதி என்பவர் ஒரு பொதுவானவர். அவர் பதவியில் இருந்து விலகினாலும், அவர் அரசியலுக்கு வரக்கூடாது அல்லது அரசியல் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினையிலும் தலையிடுவது அவருக்கு நியாயம் கிடையாது. அதுதான் மரபு. அவர் ஒரு பொதுவானவராக மாறிவிடுகிறார்.**

### ஒரே நாடு - ஒரே தேர்தல் முயற்சிக்கு தலையாட்டி பொம்மைகளைக் கொண்ட குழு!

**ஆனால் அதை எல்லாம் இன்றைக்குக் கொச்சைப்படுத்தி, கேவலப்படுத்தி அதையெல்லாம் பற்றிக் கவலைப்படாமல், இவர்கள் சொல்வதை அவர் கேட்பார் என்பதற்காக அவரைப் போட்டு, அதற்குப் பிறகு அதில் சில உறுப்பினர்களைப் போட்டிருக்கிறார்கள். அந்த உறுப்பினர்களிலாவது எல்லா கட்சியும் கலந்து, கேட்டு போட்டார்களா என்றால், அதுவும் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு நாடாளுமன்றத்தில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. தி.மு.க.வின் பிரதிநிதிகள் இருக்கிறார்களா என்றால் கிடையாது.**

## தேர்தல் செலவைக் குறைக்கிறீர்களோ இல்லையோ - கொள்ளையடிப்பதை நிறுத்துங்கள்!

**எனவே தலையாட்டி பொம்மைகளாக இருக்க வேண்டும் என்பதற்காக சில பேரை போட்டு, அவர்கள் நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்பதற்காக ஒரு சர்வாதிகாரத்தோடு அந்த கமிட்டியை நியமித்து ஒரு சதித் திட்டத்தை ஏற்படுத்துவதற்காக இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.**

அதை இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கும் எதிர்க்கட்சி அ.தி.மு.க.,- ஆளுங்கட்சியாக இருந்தபோது அந்தக் கொள்கையை எதிர்த்தார்கள். இப்போது எதிர்க்கட்சியாக இருக்கிறபோது, தி.மு.க. ஆளுங்கட்சியாக இருக்கிறபோது, அதே அ.தி.மு.க. அதை ஆதரிக்கிறது. இதை ஆதரிக்கிறதை பார்க்கிறபோது என்ன நினைக்கிறோம் என்றால், ஆட்டுத் தலையை வெட்டுவார்கள் அல்லவா, அதற்கு என்ன சொல்வார்கள்? ஆம், பலிகடா செய்வார்கள் அல்லவா, அந்த மாதிரிதான். தாம் பலிகடா ஆகப்போகிறது என்று ஆட்டுக்கு தெரியாது. அதனால் அ.தி.மு.க. பலிகடா ஆகப்போகிறது. இந்த சட்டம் நிறைவேறினால், தி.மு.க. மட்டுமல்ல, எந்த அரசியல் கட்சியும் நாட்டில் செயல்பட முடியாது. எனவே ‘One Man Show’ ஆகிவிடும். ஒரே நாடு – ஒரே தலைவர், ‘அதிபர்’ என்று அவரே அறிவித்து விடலாம். எனவே தேர்தலே கிடையாது. ஒரே நேரத்தில் ஒரே தேர்தல்தான் வைக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள்.

### ஒரே நேரத்தில் தேர்தல் என்பது நடைமுறைக்கு சாத்தியமானதா?

நான் கேட்கிறேன், கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். 2021-இல் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நடந்து, நாம் ஆட்சிக்கு வந்து இரண்டரை வருடம் ஆகிறது. இன்னும் இரண்டரை வருடம் இருக்கிறது. எனவே நாடாளுமன்றத் தேர்தல் வருகிறபோது, ஒரே தேர்தல் நடத்த வேண்டும் என்றால் இந்த ஆட்சியைக் கலைத்து விடுவீர்களா? நாம் மட்டுமா, பக்கத்தில் இருக்கும் கேரள மாநிலம். அதேபோல மேற்குவங்கம். அங்கெல்லாம் கலைத்துவிடுவீர்களா? அவர்களுக்கெல்லாம் இன்னும் இரண்டரை வருடத்திற்கு மேல் ஆட்சி இருக்கிறது. ஏன் சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற கர்நாடக மாநிலம். அங்கு 40 சதவீதம் ஊழல் என்ற ஒரு சிறப்புப் பெயர் எடுத்து, பா.ஜ.க., படுதோல்வி அடைந்து, அங்கு காங்கிரஸ் தலைமையில் ஆட்சி அமைந்திருக்கிறது. எனவே அந்த ஆட்சியைக் கலைத்து விடுவீர்களா?

**சரி, அதுதான் போகட்டும். ஒரே நேரத்தில் தேர்தல் வைக்கிறீர்கள். அப்படி நாடாளுமன்றத்தோடு சட்டமன்றங்களுக்கும் தேர்தல் வைத்து, எங்காவது ஒரு மாநிலத்தில் மெஜாரிட்டி வராமல் போய்விட்டது என்றால், ஆட்சியை அமைக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்றால் அப்போது என்ன செய்வீர்கள்? மறுபடியும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் வரும்வரை அந்தத் தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதி ஆட்சி நடத்தப் போகிறீர்களா? எனவே இப்படி ஒரு அசிங்கமான, கேவலமான ஒரு சதித் திட்டத்தைத் தீட்டி, எனவே ஒரு அதிபராகத் தான் இருக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கு அந்த முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர நாட்டைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.**

**தேர்தல் செலவை மிச்சப்படுத்த வேண்டும், குறைக்க வேண்டும் என்ற ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். நீங்கள் தேர்தல் செலவைக் குறைக்கிறீர்களோ, இல்லையோ நீங்கள் கொள்ளை அடிப்பதை முதலில் குறையுங்கள். சி.ஏ.ஜி. ரிப்போர்ட் என்ன கொடுத்திருக்கிறது? ரூ.7.5 லட்சம் கோடி!**

### இந்தியாவைக் காப்பாற்ற நாம் தயாராக வேண்டும்!

நெடுஞ்சாலை போட்டதில், அதே நேரத்தில் டோல்கேட் வசூலில் - இப்படி பல நிலைகளில் கோடி கோடியாகக் கொள்ளை அடித்து, அதுவும் ஆதாரங்களோடு சி.ஏ.ஜி. அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதைப் பற்றி கவலைப்படாமல், அதற்கு இதுவரை பதில் சொல்ல முடியாத நிலையில் ஒரு பிரதமர் இருக்கிறார் என்று சொன்னால், இப்படிப்பட்ட இந்த கொடுமையான ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்கு வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தத் திருமண விழாவில், இது கழகக் குடும்பத்தில் நடைபெறும் திருமணம், நம்முடைய வீட்டு திருமணம். எனவே இந்தக் குடும்பத் திருமணத்தில் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதிமொழியும், சபதமும் - ‘இந்தியாவைக் காப்பாற்ற நாம் இன்றைக்குத் தயாராக இருக்க வேண்டும்‘ என்று இந்த நேரத்தில் உங்களை எல்லாம் நான் அன்போடு கேட்டுக் கொண்டு, மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்கள் எல்லா நன்மைகளையும் பெற்று சிறப்போடு வாழ்ந்திட வேண்டும்.

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லி இருக்கும், ‘வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய்‘ இருந்து வாழுங்கள்... வாழுங்கள்... வாழுங்கள் என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துரையில் குறிப்பிட்டார்.



அரியலூர் மாவட்டம், குன்னம் தொகுதி, குழுமூர் கிராமத்தைச் சேர்ந்த நீட் எதிர்ப்பு போராளி அனிதா அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, “அனிதா நினைவு நூலகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு” மாவட்ட கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார். உடன் பேராசிரியர் அருண், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், அனிதாவின் தந்தை சண்முகம், சகோதரர் மணிரத்தினம், மாவட்டப் பிரதிநிதி கோடி, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் சுமதி கருணாநிதி, மாவட்ட அணிகளின் பொறுப்பாளர்கள் செல்வம், தர்மராஜ், தமிழ்மாறன், ஆசைதம்பி, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரமணி மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், ஊர் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.



கோவை கவுண்டம்பாளையத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மாநில அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டச் செயலாளர்கள் தொ.அ.ரவி, தளபதி முருகேசன், நாகராஜ், டி.ஆர்.எஸ்.சண்முகசுந்தரம், மாநில தொண்டர் அணி மாலதி பகுதி செயலாளர் சரத் விக்னேஷ், வார்டு செயலாளர் குட்டி கிருஷ்ணன், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### ஒரே நாடு – ஒரே தேர்தல் திட்டம்!

# 99 சதவிகித உறுப்பினர்கள் ஒன்றிய அரசுக்கு ஆதரவானவர்கள்!

## ஆய்வுக்குழுவின் முடிவு எப்படி? சமூக ஆர்வலர்கள் கருத்து!

புதுடெல்லி, செப்.5-

ஒரேநாடு, ஒரே தேர்தல் திட்டம் தொடர்பான ஆய்வுக் குழுவில் இடம் பெற்றுள்ள 99சதவீத உறுப்பினர்களும், ஒரே தேர்தல் திட்டத்துக்கு ஆதரவானவர்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் ஆய்வுக்குழுவின் முடிவு எப்படி இருக்கும் என்று சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற தேர்தல் முதல் உள்ளாட்சி தேர்தல் வரை, ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது குறித்து முன்னாள் குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் குழு அமைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதில், இரண்டாவதாக இடம் பெற்றுள்ளவர் உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆவார். காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி பா.ஜ.க.வுக்கு ஆதரவான கருத்துக்களைத் தெரிவித்து வரும் குலாம் நபி ஆசாத்தும் குழுவில் இடம் பெற்றுள்ளார். இவர் ஒரே தேர்தலுக்கு ஆதரவான கருத்துகளை ஏற்கனவே தெரிவித்து வருகிறார். மேலும், உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் ஹரிஷ் சால்வே, வாஜ்பாய் ஆட்சியின் போது சொலிசிட்டராக இருந்தவர். காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்ட 370 சிறப்பு அதிகாரம் நீக்கம், டெல்லி அதிகார பறிப்பு வழக்குகளில் ஒன்றிய அரசுக்கு ஆதரவாக தற்போது வாதிட்டு வருகிறார்.

இதேபோன்று, முன்னாள் மக்களவை செயலாளரான சுபாஷ் காஷ்யாப், பா.ஜ.க.வின் நுபுர் சர்மா நடத்திய விவாதத்தில் கலந்து கொண்டு ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு ஆதரவான கருத்தை வெளியிட்டுள்ளார். மற்றொரு உறுப்பினரான ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி என்.கே.சிங் ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து, பின்னர் 2014 ஆம் ஆண்டில் பா.ஜ.க.வில் இணைந்தவர். அதன் பின்னர் 2017 முதல் 2020 ஆம் ஆண்டு வரை 15வது நிதிக்குழுவின் தலைவராக இருந்தவர் ஆவர். ஹரியானாவைச் சேர்ந்த முன்னாள் ஒன்றிய கண்காணிப்பு ஆணையர் சஞ்சய் கோத்தாரி முன்னாள் குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்தின் செயலாளாரகவும் பணியாற்றியுள்ளார். இந்த குழுவில் இடம் பெற்றுள்ள அனைவருமே பா.ஜ.க.வின் ஒரே தேர்தல் திட்டத்துக்கு எதிரானவர்கள் அல்ல என்று கூறப்படுகிறது. குழுவில் இடம் பெற்ற ஒரே எதிர்கட்சி உறுப்பினர் ஆதிரஞ்சன் சௌத்ரி ஒரே தேர்தல் குறித்த ஆய்வு என்பதே கண்துடைப்பு என்று கூறி குழுவிலிருந்து வெளியேறுவதாக அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கலைஞர் நூற்றாண்டு விழா: திருச்சி தெற்கு மாவட்ட

# விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கைப்பந்துப் போட்டி!

## அமைச்சர்கள் கே.என்.நேரு - அன்பில் மகேஷ் பொய்யாமொழி - நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் பரிசுகள் வழங்கினர்!

திருச்சி, செப்.5-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருச்சி தி.மு.க தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில், திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில அளவிலான கைப்பந்து போட்டி நடைபெற்றது.

லீக் முறையில் நடத்தப்பட்ட இப்போட்டியில், ஆண்கள் பிரிவில் ஜமால் முஹம்மது கல்லூரி அணி முதலிடமும், தமிழ்நாடு காவல் துறை அணி 2வது இடத்தையும் பிடித்தது. அதே போல பெண்கள் பிரிவில் தமிழ்நாடு காவல் துறை அணி முதலிடமும், ஜமால் முகமது கல்லூரி அணி 2வது இடத்தையும்,

வெற்றிபெற்ற இந்த அணிகளுக்கு வெற்றிக்கான கோப்பையும், பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் ஆகியோர் வழங்கி பாராட்டினர்.

பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த தயாநிதிமாறன் எம்.பி. குறிப்பிட்டதாவது:

அவசர கதியில் நாடாளுமன்றத்தை கூட்டுகிறார்கள். ஆகஸ்ட் மாதத்தில் நடந்து முடிந்த பாராளுமன்ற கூட்டத்தொடரில் பிரதமர் மோடி கலந்து கொள்ளவே இல்லை. மணிப்பூர் விவகாரம் குறித்து பேச மறுக்கிறார். வெளி நாடுகளுக்கு செல்லும் பிரதமர் இதுவரை மணிப்பூருக்கு செல்லவில்லை.

நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் கூட்டும் போது எதற்காக அது கூட்டப்படுகிறது என்பதை தெரிவிக்க வேண்டும் ஆனால் இது வரை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. சிறப்பு கூட்டத்தொடரில் கேள்வி நேரம் கிடையாது என்கிறார்கள் அதுவும் ஏன் என தெரியவில்லை.

ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து ஆய்வு செய்ய குழு அமைத்துள்ளார்கள். அந்த குழுவில் தென்னிந்தியாவை சேர்ந்த எந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் இல்லை. அதேபோல தேர்தல் ஆணையத்தை சேர்ந்த அதிகாரிகள் யாரும் இல்லை. முதல் முறையாக பதவியிலிருந்து சென்ற குடியரசு தலைவரை ஒரு குழுவின் தலைவராக நியமித்துள்ளார்கள் அதுவும் ஏன் என தெரியவில்லை.

கோமாளியை ரசிக்கலாம் ஆனால் கோமாளி கையில் ஆட்சியை கொடுத்தால் மன்றமே சர்க்கஸ் கூடாரமாக மாறிவிடும் என்பதற்கு தற்போது நடப்பதே உதாரணம். மோடியின் கூட்டணியில் சி.பி.ஐ, வருமான வரித்துறை, அமலாக்கத்துறை தான் இருக்கிறார்கள். ஆனால் இந்தியா கூட்டணி மக்கள் கூட்டணி.

நாடாளுமன்ற தேர்தல், சட்டமன்ற தேர்தல், உள்ளாட்சி தேர்தல் ஆகிய மூன்றிலும் தோல்வி அடைந்ததால் கஷ்டமாக இருக்கிறது என ஒரே முறை தோல்வி அடைந்து விடலாம் என்பதற்காக தான் ஒரே நாடு, ஒரே தேர்தலை அ.தி.மு.க தற்போது ஆதரிக்கிறது என உதயநிதி தெரிவித்துள்ளார். அதையே நானும் தெரிவிக்கிறேன்.

சி.ஏ.ஜி. ஊழல் மிகப்பெரிய ஊழல் அதை மூடி மறைக்க பார்க்கிறார்கள். அதே போல அதானி பிரச்சனை இது போன்ற பிரச்சனைகளை திசை திருப்ப அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். நாட்டில் முக்கிய பிரச்சனை இருக்கும் போது மக்களை அதிலிருந்து திசை திருப்பி தேவையற்ற சர்ச்சைகளை உருவாக்கி அவர்களின் தவறை மறைப்பது தான் மோடியின் வேலை.

2024 ல் இந்தியா கூட்டணி வெற்றி பெற்ற உடன் நீட்டிற்கு விதி விலக்கை கொண்டு வருவோம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் மாவட்ட மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர்கள்டால்பின் ஏ.ஜெ.சாலமன், கே.லோகநாதன், மாவட்டத் துணைச் செயலாளர் செங்குட்டுவன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட மாநகர நிர்வாகிகள் கே.கௌதம், பஷீர்அகமத், எம். நாகராஜன், எஸ்.ரவீந்தரநாத், எம்.ஆர்.மதன், சிவா நாகராஜன், ஜி.பிரபு, கே.ஹரிஹரன், எம்.ராஜராஜன், பிச்சையப்பன், அன்பில் கோவிந்தராஜ் மற்றும் திரளானோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் 3 நாட்களுக்கு பரவலாக மழை பெய்ய வாய்ப்பு!

சென்னை: செப். 5 -

தமிழ்நாட்டில் 3 நாட்களுக்கு பரவலாக மழையும், ஒரு சில இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட தகவல்: மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நேற்று கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தேனி, திண்டுக்கல், வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்தது.

நேற்று (செப்.4) தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானாது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கனமழை பெய்தது.

இன்று (செப்.5ம் தேதி,) தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானாது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கோவை மாட்டத்தின் மலை பகுதிகள், நீலகிரி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

நாளை (செப்.6ம் தேதி,) தமிழகம், புதுச்சேரி , காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானாது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஒருசில இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக தெரிவித் துள்ளது..

### புதுக்கோட்டை தெற்கு மாவட்ட

# அனைத்து அணிகளின் ஆலோசனை கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!



புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

எதிர்வரும் 7.9.2023 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அறந்தாங்கி சந்தோஷ் திருமண மகாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அனைத்து அணிகளின் தலைவர்கள். துணைத் தலைவர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. அதுசமயம் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர , பேரூர் செயலாளர்கள், நகராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

பொருள் : முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா சம்பந்தமாக

**அமைச்சர் எஸ்.ரகுபதி**
செயலாளர்
புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க.

### ஆத்தூர் - கோனூர் ஊராட்சியில்

# சங்கான்குளத்தை சொந்தச் செலவில் தூர்வாரும் பணி!

## அமைச்சர் ஐ. பெரியசாமிக்கு கிராம மக்கள் பாராட்டு!

ஆத்தூர் , செப்.5-

கோனூர் ஊராட்சியில் 41ஏக்கர் நிலப்பரப்புள்ள சங்கான்குளத்தை தனது சொந்த செலவில் தூர்வாரி கொடுக்கும் ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு விவசாயிகள், கிராம மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர். கோனூர், கரிசல்பட்டி ஊராட்சி, கசவனம்பட்டி, தருமத்துப்பட்டி, அனுமந்தராயன்கோட்டை, குட்டத்துப்பட்டி ஊராட்சி கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயன் பெறுகிறார்கள்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கோனூர் ஊராட்சியில் சங்கான்குளம் உள்ளது சுமார் 41ஏக்கர் (16.43ஹெக்டேர்) நிலப்பரப்புள்ள இந்த குளத்தை தூர்வாரி கொடுக்க வேண்டுமென்று ஊராட்சி மன்ற தலைவர் வெள்ளதாய் தங்கபாண்டியன் தலைமையில் விவசாயிகள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்தனர். கோரிக்கை மனுக்களை பெற்ற உடனே தனது சொந்த செலவில் சங்கான்குளத்தை தூர்வாரி கொடுப்பதாக உறுதியளித்தார். அதன்படி சங்கான்குளத்தில் தூர்வாரும் பணி கடந்த ஒரு வார காலமாக நடைபெற்று வருகிறது. கோனூர், கரிசல்பட்டி ஊராட்சி, கசவனம்பட்டி, தருமத்துப்பட்டி, அனுமந்தராயன்கோட்டை, குட்டத்துப்பட்டி ஊராட்சி கிராமங்களைச் சேர்ந்த குயவநாயக்கன்பட்டி, மேலதிப்பம்பட்டி, கீழதிப்பம்பட்டி, அலவாச்சிபட்டி, மைலாப்பூர், குட்டத்து ஆவாரம்பட்டி, போடம்பட்டி, பழைய கன்னிவாடி, வட்டப்பாறை, காரமடை, உட்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் டிராக்டர் மூலம் சங்கான்குளத்திற்கு வந்து இலவசமாக வண்டல் மண்ணை எடுத்து சென்று தங்களுடைய விளை நிலங்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர். இதனால் சுமார் 40க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த நூற்றுக் கணக்கான விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர். இதுகுறித்து கோனூர் ஊராட்சி மன்ற தலைவர் வெள்ளத்தாய் தங்கபாண்டியன் கூறுகையில் ரெட்டியார் சத்திர ஒன்றிய பகுதி விவசாயிகளின் பாதுகாவலராக இருக்கும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி எங்கள் பகுதி விவசாயிகளின் நலன் கருதி தனது சொந்த செலவில் சுமார் 30 லட்சம் மதிப்பில் சங்கான் குளத்தை தூர்வார உத்தரவிட்டதால் இன்று விவசாயிகள் இலவசமாக வண்டல் மண்ணை எடுத்து வருகிறார்கள். ஊராட்சி நிர்வாகம் சார்பாக நாங்கள் முறையாக வரிசை முறைப்படி விவசாயிகள் குளத்து வண்டல் மண்ணை எடுத்து செல்ல நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கொட்டும் மழையிலும் விவசாயிகள் வண்டல் மண்ணை எடுத்து செல்கிறார்கள் என்றார்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

# பள்ளிபாளையம் ஒன்றியத்தில் மாற்றுக் கட்சியினர் 250 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## மா.செ.மதுரா செந்தில் முன்னிலையில்!

நாமக்கல், செப். 5 -

நாமக்கல் மேற்கு மாவட்டம் பள்ளிபாளையம் ஒன்றியத்தில் மாற்றுக் கட்சியினர் 70 பெண்கள் உட்பட 250 பேர் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியச் செயலாளர் இளங்கோவன் ஏற்பாட்டில், பாரத ஹிந்த் பரிவார் அமைப்பின் மாநில தொழிலாளர் அணி துணைத் தலைவர் தலைமையில், கொக்கராயன்பேட்டை, புதுப்பாளையம், காடச்சநல்லூர், ஓடப்பள்ளி, கோவிந்தம்பாளையம் பகுதிகளில் இருந்து 70 பெண்கள் உட்பட 250 பேர் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் மயில்சாமி, மீனவர் அணி மாவட்ட அமைப்பாளர் குமார், ஆலாம்பாளையம் பேரூர்க் கழகச் செயலாளர் கார்த்திராஜ், ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் கார்த்திக்ராஜா, உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர தி.மு.க. நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில், “மாபெரும் தமிழ் கனவு திட்டம்” நிகழ்ச்சியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா ஆகியோர் துவக்கி வைத்து, மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் (பொ) மரு.ராஜ்மோகன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மு.செய்யது முகம்மது, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் பள்ளிபாளையம் ஒன்றியத்தில் பள்ளிபாளையம் தெற்கு ஒன்றிய செயலாளர் இளங்கோவன் ஏற்பாட்டில், பாரத ஹிந்த் பரிவார் அமைப்பின் மாநில தொழிலாளர் அணி துணைத் தலைவர் தலைமையில், கொக்கராயன்பேட்டை , புதுப்பாளையம், காடச்சநல்லூர், ஓடப்பள்ளி, கோவிந்தம்பாளையம் பகுதிகளில் இருந்து மாற்றுக் கட்சியினர் 70 பெண்கள் உட்பட 250 பேர் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் மயில்சாமி, மீனவர் அணி மாவட்ட அமைப்பாளர் குமார், ஆலாம்பாளையம் பேரூர் கழக செயலாளர் கார்த்திராஜ், ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் கார்த்திக்ராஜா உள்ளிட்ட மாவட்ட, ன்றிய, நகர தி.மு.க. நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.


5-9-2023
தென்காசி
மாவட்டத்திற்கு
வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக. வருக..
மகிழ்வோடு வரவேற்கும் : பொ.சிவபத்மநாதன் எம்.ஏ.பி.எல்.
முன்னாள் மாவட்ட கழக செயலாளர்
தென்காசி தெற்கு மாவட்டம்


கலைஞர் 100 1924 - 2023
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
ஆணையேற்று
முத்தமிழ் அறிஞர் கலைஞர்
நூற்றாண்டு திருவுருவச் சிலை திறப்பு விழா
மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி
மாபெரும் பொதுக்கூட்டம்
நாள் : 05.09.2023 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி
இடம் : விளையாட்டுத் திடல், வீராம்பட்டினம், அரியாங்குப்பம், புதுச்சேரி.
திருவுருவச் சிலையை திறந்து வைத்து சிறப்புரை :
மாண்புமிகு. ஆ.இராசா B.Sc., M.L., M.P. அவர்கள்
கழகத் துணைப் பொதுச்செயலாளர்
மாண்புமிகு. இரா.சிவா M.L.A. அவர்கள்
மாநில கழக அமைப்பாளர், புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
எஸ்.பி.சிவக்குமார்
மாநில அவைத் தலைவர்
சி.பி.திருநாவுக்கரசு
தலைமைச் செயற்குழு உறுப்பினர்
வி.அனிபால்கென்னடி M.L.A.
மாநில துணை அமைப்பாளர்
இரா.செந்தில்குமார் M.L.A.
மாநில பொருளாளர்
எல்.சம்பத் M.L.A.
மாநில இளைஞர் அணி அமைப்பாளர்
அனைவரையும் அன்புடன் அழைத்து மகிழும்...
ஜெ.வேலன்
முன்னாள் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்
கி.சங்கர் (எ) சிவசங்கரன்
மாநில அமைப்பாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை
Sri Thillai 94436 30951
அரியாங்குப்பம் சட்டமன்ற தொகுதி தி.மு.க. புதுச்சேரி


கலைஞர் 100 1924 - 2023
நாள்: 05.09.2023 செவ்வாய் கிழமை
நேரம்: மாலை 3.00 மணி
இடம் : இசக்கி மஹால் மைதானம் தென்காசி மாவட்டம்
தென்காசி மாவட்ட இளைஞரணி
செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தரும்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே! வருக! வருக!!
மாண்புமிகு. K.K.S.S.R.ராமசந்திரன் அவர்கள்
தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்
திரு. தனுஷ் எம் குமார் அவர்கள்
தென்காசி பாராளுமன்ற உறுப்பினர்
திரு. வே.ஜெயபாலன் அவர்கள்
தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர்
திரு. ஈ.ராஜா M.L.A அவர்கள்
சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர்,வடக்கு மாவட்ட கழக செயலாளர்
திரு. G.P.ராஜா அவர்கள்
மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்
திரு. T.R.கிருஷ்ணராஜா அவர்கள்
தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், பேரூராட்சி மன்ற உறுப்பினர் - குற்றாலம்
திரு. T.M.S.முகேஷ் அவர்கள்
வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்
தென்காசி மாவட்ட தி.மு.க.


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர் ஆணையேற்று
கலைஞர் 100 1924 - 2023
முத்தமிழ் அறிஞர் கலைஞர்
நூற்றாண்டு திருவுருவச் சிலை திறப்பு விழா
மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி
மாபெரும் பொதுக்கூட்டம்
நாள் : 05.09.2023 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி
இடம் : விளையாட்டுத் திடல், வீராம்பட்டினம், அரியாங்குப்பம், புதுச்சேரி.
முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருவுருவச் சிலையை திறந்து வைத்து சிறப்புரை :
மாண்புமிகு. ஆ.இராசா B.Sc., M.L., M.P. அவர்கள்
கழகத் துணைப் பொதுச்செயலாளர்
மாண்புமிகு. இரா.சிவா M.L.A. அவர்கள்
மாநில கழக அமைப்பாளர், புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
எஸ்.பி.சிவக்குமார்
மாநில அவைத் தலைவர்
சி.பி.திருநாவுக்கரசு
தலைமைச் செயற்குழு உறுப்பினர்
வி.அனிபால்கென்னடி M.L.A.
மாநில துணை அமைப்பாளர்
இரா.செந்தில்குமார் M.L.A.
மாநில பொருளாளர்
எல்.சம்பத் M.L.A.
மாநில இளைஞர் அணி அமைப்பாளர்
ஏ.கே.குமார்
மாநில துணை அமைப்பாளர்
அ.தைரியநாதன்
மாநில துணை அமைப்பாளர்
பூ.சுப்புராயன்
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
அழைப்பின் மகிழ்வில்...
பா.செ.சக்திவேல்
தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்
நா.கோபாலகிருஷ்ணன்
தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்
வ.சீத்தாராமன்
தொகுதி கழக செயலாளர்
ஆ.ஜெ.அருண்குமார்
மாநில பொறியாளர் அணி அமைப்பாளர்
பா.செ.தினகரராசு
மாநில பிரதிநிதி
ஜெ.க.அரசு
தொகுதி இளைஞர் அணி அமைப்பாளர்
சு.முகுந்தன்
மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர்
Sri Thillai 94436 30951
அரியாங்குப்பம் சட்டமன்ற தொகுதி தி.மு.க. புதுச்சேரி



விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம் , நாவம்மாள் மருதூர் ஊராட்சியில் குடிநீருடன் கழிவு நீர் கலந்த நீரை குடித்ததால் விழுப்புரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி நேரில் சந்தித்து உடல் நலம் விசாரித்து ஆறுதல் கூறினார். மேலும் மருத்துவர்களை சந்தித்து உடனடியாக உயர் தர சிகிச்சை அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிக்குமார், , மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், ஒன்றிய குழுத் தலைவர் ஆர். எஸ். வாசன், ஒன்றியச் செயலாளர் வே. கணேசன், ஜெ. ஜெயபால், பி.வி.ஆர்.விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், மாவட்ட ஊராட்சி மீனா வெங்கடேசன், பனிமொழி செல்வரங்கம், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு டி. என்.ஏ.தமின், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு உள்ளிட்ட அரசுத்துறை, மருத்துவ துறை அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் வருகின்ற டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி கழக மாநில இளைஞரணி இரண்டாவது மாநாடு நடைபெற உள்ள இடத்தை அங்கு நடைபெற்று வரும் முன்னேற்பாட்டு பணியினை நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம், மத்திய மாவட்ட செயலாளரும் எம்.எல்.ஏ.வுமான ஆர்.ராஜேந்திரன், மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி மற்றும் மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம் , மாவட்ட மாணவரணி முனைவர் அ.சீனிவாசன், ஒன்றிய செயலாளர்கள் மூர்த்தி ,சிவராமன், அன்பு (எ) மருதமுத்து , பேரூர் செயலாளர்கள் பாபு (எ) வெங்கடேஷ்வரன், வெங்கடேசன், ஏத்தாப்பூர் பேரூராட்சி தலைவர் அன்பழகன் மற்றும் ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### புதுவை மாநிலம் - அரியாங்குப்பம் தொகுதி தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு சிலை திறப்பு விழா பொதுக்கூட்டம்!

## ஆ. இராசா, எம்.பி.- எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா சிறப்புரை!

புதுச்சேரி, செப். 5 -

புதுவை மாநிலம் அரியாங்குப்பம் தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு சிலை திறப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டம் வீராம்பட்டினம் விளையாட்டுத் திடலில் இன்று (5-ஆம் தேதி) மாலை 5.30 மணியளவில் நடைபெறுகிறது. பொதுக்குழு உறுப்பினர் பா.செ.சக்திவேல் தலைமை தாங்குகிறார். தொகுதி செயலாளர் வ.சீத்தாராமன் வரவேற்று பேசுகிறார்.

முன்னாள் செயற்குழு உறுப்பினர் பூ.சு. இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர் நா. கோபாலகிருஷ்ணன், பொறியாளர் அணி அமைப்பாளர் ஆ. ஜெ. அருண்குமார், கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் கி. சங்கர், ஜெ.வேலன், இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆர்.கே.கலிவரதன், மீனவர் அணித் தலைவர் மா. ரமேஷ் (எ) தில்லையப்பன், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் துணை அமைப்பாளர் ரா. தியாகராஜன், தொகுதி அவைத் தலைவர் ர. பாண்டியன், துணைச் செயலாளர்கள் க. சிலம்புச்செல்வன், த. ராஜேந்திரன், வீ. நந்தினி, பொருளாளர் க. மெய்யழகன், மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் கு. வினோத்குமார், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சு. முகுந்தன், மீனவரணி துணை அமைப்பாளர்கள் த.சுப்புராயன், நா. மதிவாணன், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர். சே. பாலபாரதி, இலக்கிய அணி துணை அமைப்பாளர் அ. ஜபருல்லா, தொகுதி இளைஞர் அணி அமைப்பாளர் க. அரசு, செயற்குழு உறுப்பினர்கள் சி. மதுரைக்குமார், சி. ஜீவானந்தம், சி.குமார், பா. விஜய முருகன், மூ. ரமேஷ், சு. சேரலாதன், க. சேதுபதி, சு. பரூக் (எ) ஆறுமுகம், அ. அருணாச்சலம், வ. பூபாலன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் திமுக துணைப் பொதுச்செயலாளர் ஆ. இராசா, எம்.பி., புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா ஆகியோர் கலந்து கொண்டு, கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நிறுவப்பட்டுள்ள கலைஞர் திருவுருவச் சிலையை திறந்து வைத்தும், தொடர்ந்து நடைபெறும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

இந்த கூட்டத்தில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், முன்னாள் எம்.பி., சி.பி. திருநாவுக்கரசு, மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ.,, துணை அமைப்பாளர்கள் எ.கே. கல்யாணி குமார், அ. தைரியநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. சுப்புராயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் வெ. ராமசாமி, அ. சோமசுந்தரம், ந. தங்கவேலு, ப. செல்வநாதன், சி.கோபால், வே. கார்த்திகேயன், பெ. வேலவன், வீ. சண்முகம், ஆர். கோகுல், எஸ். தர்மராஜன், ஆர். ரவீந்திரன், டி. செந்தில்வேலன், டாக்டர் கா. மாயக்கிருஷ்ணன், ப. இளம்பரிதி, பெ. பழநி, மு. பிரபாகரன், எஸ். எஸ். செந்தில்குமார், வே. மாறன், எஸ். அமுதாகுமார், எஸ்.நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் எம்.ஆர். திராவிடமணி, இரா. சக்திவேல், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், து. சக்திவேல், கோ. தியாக ராஜன், ர. சிவக்குமார், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ. மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ. சக்திவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், கலிய. கார்த்திகேயன், சே. ராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், ச. அசோக் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

கூட்டத்தின் பா.செ.தினகரராசு நன்றி கூறுகிறார்.

### ஏழை - எளிய மக்கள் நோயற்ற வாழ்வு வாழ - உருவானதுதான்

# கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, செப். 5-

முத்தமிழறிஞர்கலைஞர் அவர்களால் ஏழை, எளிய பொதுமக்கள் நோயற்ற நல் வாழ்வு வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் "கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம்" தொடங்கிவைக்கப்பட்டது என அரிமளத்தில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேசினார்.



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், பெருங்குடி அரசு உயர்நிலைப்பள்ளியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், "கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம்" மருத்துவ முகாமினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைமற்றும்ஊழல்தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் 31.08.2023 அன்று துவக்கி வைத்து, கண்காட்சி அரங்கினை பார்வையிட்டு, பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது:-

முத்தமிழறிஞர்கலைஞர் அவர்களால் ஏழை, எளிய பொதுமக்கள் நோயற்ற நல் வாழ்வு வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் "கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம்" தொடங்கி வைக்கப்பட்டது. அதன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் 2023-2024ஆம்நிதியாண்டில் ஒரு வட்டாரத்திற்கு மூன்று மருத்துவ முகாம்கள் வீதம், 39மருத்துவமுகாம்கள்நடத்தப்படதிட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை புதுக்கோட்டை மாவட்டத்தில் 7 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 8வது மருத்துவ முகாம் அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெருங்குடி அரசு உயர்நிலைப்பள்ளியில் இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இம்முகாமில், மருத்துவ வல்லுநர்கள் அடங்கிய சிறப்பு மருத்துவ குழுவினரால்பொதுமக்களுக்குகுழந்தைகள் நலம், பல் மருத்துவம், கண், காது, மூக்கு, தொண்டை, இருதய நோய் சிகிச்சை,நீரிழிவு நோய்கண்டுபிடிப்பு, புற்றுநோய், காசநோய், மகப்பேறு மருத்துவம், சித்த மற்றும் இந்திய மருத்துவம், மனநல ஆலோசனை போன்ற துறைகளில் நிபுணத்துவம்வாய்ந்தமருத்துவர்களால், "கலைஞரின் வரும் முன் காப்போம் திட்டம்' மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

இம்மருத்துவ முகாமினை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்வதன்மூலம் ஆரம்ப நிலையிலேயே நோய்கள் கண்டறியப்பட்டு, புற்றுநோய் உள்ளிட்ட நோய்களுக்கு சிகிச்சைகள் அளித்து, விலை மதிப்பற்ற மனித உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மக்களுக்காகநடத்தப்படும்இந்த "கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம்" மருத்துவ முகாமினை அனைத்து பொதுமக்களும்உரியமுறையில்பயன்படுத்தி, நோயற்ற நல்வாழ்வு வாழ வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

மேலும் சட்டத்துறை அமைச்சர்எஸ்.ரகுபதி, டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் மருத்துவ பெட்டகங்களையும், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்து உபகரணங்களையும், மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் மருந்துபெட்டகங்களையும் பயனாளிகளுக்கு வழங்கினார்.

இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம்ஒன்றியக்குழுத்தலைவர் மேகலா முத்து, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மருத்துவர் ராம்கணேஷ் (புதுக்கோட்டை), வட்டாட்சியர் புவியரசன், கடியாப்பட்டி வட்டார மருத்துவ அலுவலர் மரு.பழனிவேல்ராஜன், உள்ளாட்சிஅமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





BORN TO WIN
உழைப்பால்
உயர்வு பெறுவோம்!
செயலால் சாதனை
படைப்போம்!
05.09.2023,
செவ்வாய்கிழமை அன்று
தென்காசி மாவட்டத்தில்
கழக முன்னோடிகளுக்கு
பொற்கிழி மற்றும் 1500 கழக
உடன்பிறப்புக்களுக்கு
நலத்திட்ட உதவிகள் வழங்க
வருகை தரும்....
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக.. வருக...
மாண்புமிகு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர் அவர்கள்
தமிழக வருவாய்த்துறை மற்றும் பேரிடர்துறை அமைச்சர்
ஈ.ராஜா M.A.B.L.,
சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்ட கழக செயலாளர்
வே.ஜெயபாலன்
தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர்
தென்காசி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க



செப்டம்பர் 5-ல்
தென்காசி மாவட்டத்தில் கழக முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கிடவும், மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள்
கூட்டத்திற்கும் வருகை தரும்...
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாநில திமுக இளைஞர் அணி செயலாளர்
அவர்களே வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்...
மாண்புமிகு. K.K.S.S.R.இராமச்சந்திரன் அவர்கள்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்,
விருதுநகர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்.
மாண்புமிகு. தங்கம் தென்னரசு அவர்கள்
நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர்,
விருதுநகர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்.
திரு. ஜெயபாலன் அவர்கள்
தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர்
திரு. ஈ.ராஜா அவர்கள்
தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர்
உயர்திரு. தனுஷ் எம் குமார் MP அவர்கள்
தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர்
விருதுநகர் தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளர்


5-9-2023
தென்காசி
மாவட்டத்திற்கு
வருகை தரும்
மாண்புமிகு
இளைஞர் நலன்
மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத்துறை
அமைச்சர்
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களே
வருக! வருக!!
அன்புடன்... வே.ஜெயபாலன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர்
S.M.ரஹீம் M.C
K.இராஜேஸ்வரன் B.A.,D-coop
AP.அருள் M.A.,M.Phil.,B.L.,
தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க


5-9-2023
தென்காசி மாவட்டத்திற்கு வருகை தரும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
அன்புடன்...
க.சீனித்துரை
கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய தி.மு.க செயலாளர்
காவேரிசீனித்துரை
ஒன்றிய குழு தலைவர், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம்
கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய தி.மு.க


கலைஞர்
100
1924 - 2023
தென்காசி மாவட்டத்திற்கு வருகைதரும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களை அன்புடன் வரவேற்கிறோம்...
5.09.2023
மாண்புமிகு.
K.K.S.S.R.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
உயர்திரு.
E.ராஜா சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர்
தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர்
A.அந்தோணிச்சாமி நகர செயலாளர்,
நகர்மன்ற துணைத்தலைவர், புளியங்குடி


செப் 05,
ஒருங்கிணைந்த தென்காசி மாவட்ட
கழக இளைஞர்அணி செயல் வீரர் கூட்டத்திற்கும்,
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின்
நூற்றாண்டு விழாவை முன்னிட்டு
கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும்
நிகழ்ச்சிக்கு வருகை தரும்...
கழக இளைஞர்அணி செயலாளர்,
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வரவேற்று மகிழ்கிறோம்.
K.K.S.S.R. இராமச்சந்திரன்
மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
மா. செல்லத்துரை
தலைமை செயற்குழு உறுப்பினர்
(தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் பொறுப்பாளர்)
தென்காசி மாவட்ட தி.மு.க.



திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஒன்றியம், வேலம்பாளையம் ஊராட்சி மூத்தாம்பாளையத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட ஊராட்சி வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர் அ.லட்சுமணன், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சொ.சீனிவாசன் உள்பட பலர் உள்ளனர்.

## உ.பியில் 3 மாடி கட்டிடம் இடிந்து விழுந்து விபத்து!

பாராபங்கி, செப். 5 -

உத்தர பிரதேசத்தின் பாராபங்கி மாவட்டத்தில் அடுக்கு மாடி கட்டிடம் ஒன்று திடீரென நேற்று அதிகாலை 3 மணியளவில் இடிந்து விழுந்துள்ளது. இந்த சம்பவத்தில் பலர் சிக்கி கொண்டனர்.

இதுபற்றி தகவல் அறிந்ததும், உடனடியாக போலீசார் சம்பவ பகுதிக்கு சென்றனர். உள்ளூர்வாசிகளின் உதவியுடன் மீட்பு பணி நடந்து வருகிறது. மீட்கப்பட்ட 12 பேரும் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர். எனினும், அவர்களில் 2 பேர் உயிரிழந்து விட்டனர் என கூறியுள்ளார்.

### திருவாரூர் மாவட்டத்தில்

# 25000 புதிய உறுப்பினர்களை இணைக்க முடிவு!

### மகளிர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில் தீர்மானம்!

திருவாரூர், செப். 5 -

திருவாரூர் மாவட்டத்திற்கு தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டி ருக்கும் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி புதிய நிர்வாகிகள் அறிமுக மற்றும் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை ஏற்று புதிய நிர்வாகிகளை வாழ்த்தி அவர்களின் பணிகள் குறித்து உரையாற்றினார்.

திருவாரூர் மாவட்ட மகளிர் அணி மற்றும் மாவட்ட மகளிர் தொண்டரணி அறிமுக மற்றும் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே.கலைவாணன் தலைமையில் நடைபெற்றது.

மண்டல பொறுப்பாளர் ராணி ரவிச்சந்திரன், மாநில வளைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஷ் ,மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஷோபா கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அணிஅமைப்பாளர் விமலா பாலு, நகர செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.


கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்,

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூர் மாவட்டத்திற்கு மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகளை நியமித்த கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கும் கழக துணை பொதுசெயலாளர் கனிமொழி அவர்களுக்கும், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்,மாநில நிர்வாகிகள் ஹெலன் டேவிட்சன், நாமக்கல் ராணி ஆகியோருக்கும் நன்றி தெரிவித்தல்,

திருவாரூர் மாவட்டத்தில் 25000 மகளிரை புதிய உறுப்பினர்களாக இணைப்பது, கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு கூட்டங்களையும் , மகளிரணி பாசறை கூட்டங்களையும் எழுச்சியோடு நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்ற ப் பட்டது.

கூட்டத்தில் மாவட்ட மகளிரணி தலைவர் ராணி சேகர், துணை தலைவர் அம்சவல்லி செங்குட்டுவன், துணை அமைப்பாளர்கள் சரண்யா ,பவானி, சிவசங்கரி ,அமுதா, ரேவதி, நீலவேணி ,விஜயா மற்றும் மகளிர் தொண்டரணி தலைவர் வசந்தி, துணை அமைப்பாளர்கள் மரித்தீஸ்வரி,சந்திரா, கிளாரா மேரி,ஜெயமேரி, ராஜாத்தி, சுகந்தா, வலைதள பொறுப்பாளர்கள் அழகம்மாள், யசோதா உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி:** ஏண்ணே; தமிழகத்தில் பா.ஜ.க. மட்டும் 25 தொகுதிகளில் வெற்றி பெறும் என்றும்; மொத்தத்தில் தேசிய ஜனநாயக முன்னணி 39 தொகுதிகளையும் கைப்பற்றும் என்றும்; மாநில பா.ஜ.க. தலைவர் கூறியிருக்கிறாரே ?

**பெரியதம்பி : ஆமாம் தம்பி; கனவு காண்பதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது; ஆனால் அவர் காண்பது பகல் கனவு. ஆசைப் படலாம், ஆனால் பேராசை, பெருநஷ்டத்தில் முடிந்துவிடும். அவர் முட்டாள்களின் சொர்க்கத்தில் ( Fools' Paradise ) இருக்கிறார். அதனால் படுத்துத் தூங்கி எழுந்ததும், கொட்டாவி விட்டுக்கொண்டு கொக்கரிக்கிறார் !**

**அவர் அப்படிக் கூறியிருப்பது, இன்று அவர் வழங்கியிருக்கும் 'தாமரை பிராண்ட்' நகைச்சுவை. நாள் தோறும் அவர் வழங்கிவரும் நகைச்சுவை, நமது நாட்டினரை எள்ளி நகையாட வைக்கிறது !**

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்! ஒருங்கிணைந்த

# தென்காசி மாவட்டத்தில் நல உதவிகள்! கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி!

### தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் - வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தென்காசி, செப். 5 -

ஒருங்கிணைந்த தென்காசி மாவட்டம் சார்பில் தென்காசி இசக்கி மஹால் வளாகத்தில் இன்று (05.09.2023 - செவ்வாய்க்கிழமை)நடைபெறும் கழக முன்னோடி களுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வு,1500 கழக உடன்பிறப்புகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மற்றும் கழக இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்டம் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்ற உள்ளார்கள்.

இது தொடர்பாக அவர்களது அறிக்கை வருமாறு.

இன்று (05.09.2023- செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி அளவில் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்





துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள்.

தென்காசி இசக்கி மஹால் வளாகத்தில் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் விழா நிகழ்வு முன்னிட்டு பிரம்மாண்ட மான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி தென்காசி இசக்கி மஹால் வளாகத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறும் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி மற்றும் ரூபாய் 10,000 ம் ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்வு,கழக உடன்பிறப்புகள் 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு ஆகியவற்றிலும் அதனைத் தொடர்ந்து கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தி லும் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்கள்.

இந்நிகழ்வில் கழக இளைஞர் அணி நிர்வா கிகள் மற்றும் இளைஞர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி வார்டு, கிளை கழக இளைஞரணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக இளைஞ ரணியினர் வெண் சீருடையில் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

தென்காசி மாவட்டத்திற்கு முதன்முறையாக கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகையை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள்,கழக கொடியை கையில் ஏந்தி உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும்.

மேலும் தென்காசி சிவந்தி நகரில் தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தை கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து 75 அடி உயர கம்பத்தில் கழக கொடியை ஏற்றி வைத்து சிறப்பிக் கிறார்கள்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### மேல்மலையனூர் ஒன்றியத்தில்

# ரூ 1. 64 கோடி மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலைகள்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் பணிகளை தொடங்கி வைத்தார்!

செஞ்சி, செப். 5 -

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியத்தில் முதலமைச்சர் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் மானந்தல் கீக்களூர், பரிதிபுரம், கம்மந்தாங்கல் வேம்பட்டு, வளத்தி ஆரியபுர வடை ஆகிய கிராம வழி சாலைகளை புதிய தார்ச் சாலைகளாக அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி விழா நடைபெற்றது.

மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் மானந்தல்ஜெயகாந்தா, பருதிபுரம் ரவி, மரக்கோணம் மணி, வளத்திவிஜயலட்சுமி ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 1 கோடியே 64 லட்சத்தி 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார் சாலைகள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குலோத்துங்கன், சரவண குமார், ஒன்றிய பொறியாளர்கள் நாராயணமூர்த்தி, ராதாகிருஷ்ணன், தண்டபாணி,மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன்,ஒன்றிய கவுன்சிலர்கள்ஜெயலட்சுமி தக்ஷிணாமூர்த்தி, சங்கர். சிவசக்தி, கலா நாராயணமூர்த்தி யசோதரை சந்திரகுப்தன்,நிர்வாகிகள் அர்ஷத், செல்வம், சரவணன். தோப்பு சம்பத், எஸ்.பி.சம்பத், இளைஞர் அணிமணிகண்டன், மாணவரணி ஆறுமுகம், பெருவளூர் பாபு, பொறியாளர் அணி ஏழுமலை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

### விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்

### அணிச்செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., அறிவிப்பு

விழுப்புரம் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ஜி.ரிஸ்வான் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக ஷேக்வாகித், பி.எஸ்சி., (2226, கபூர் சாகிப் தெரு, பள்ளியம்பட்டு கிராமம், செஞ்சி - 604 205) அவர்கள் மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணாஅறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 03.09.2023.

**தயாநிதிமாறன் எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க.விளையாட்டு
மேம்பாட்டுஅணி

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

### விழுப்புரம் வடக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நியமனம்

### அணிச்செயலாளர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு

விழுப்புரம் வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட கே.எஸ். எம்.மொக்தியார் அலி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக ரோமியன், பி.இ., (3, மாரியம்மன் கோவில் தெரு, பெரும்புகை, செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்) அவர்கள் விழுப்புரம் வடக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணாஅறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 03.09.2023.

**டி.ஆர்.பி. ராஜா,**
செயலாளர்,
தி.மு.க. தகவல்
தொழில்நுட்ப அணி

### 91வது வட்டக் கழகச் செயலாளர் எம்.கே.பி. அண்ணாதாசன் மகள்

# ஏ.அஜிதா தமிழ்நாடு - புதுச்சேரி பார் கவுன்சில் வழக்கறிஞராக பதிவு!

### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ.-ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ.-ப.ரங்கநாதன்-நொளம்பூர் வே.ராஜன் வாழ்த்து!

சென்னை,செப். 5 -

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்குபகுதி 91,வது வட்ட கழக செயலாளர் எம்.கே.பி. அண்ணாதாசனின் மகள் ஏ.அஜிதா 01.09.2023 அன்று தமிழ்நாடு, புதுச்சேரி பார் கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்ததை முன்னிட்டு நடைபெற்ற வாழ்த்து விழாவில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, அம்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு வாரிய தலைவர் ப.ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி 11 மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

இந்கழ்ச்சியில் 7,வது மண்டலகுழு தலைவர் பி.கே.மூர்த்தி மதுரவாயல் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள், ஆ.மாலினிஎம்சி,தீ. பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ் எம்.உதயகுமார், மாவட்ட அமைப்பாளர்கள், கே.குமரேசன் லயன் எஸ்.மணி வட்டகழக செயலாளர்கள், எஸ்.ஜி.மாதவன் ப.ஆலன் எம்.எம்.ஜெயரத்தினம் சி.சசிகுமார் எம்.இ. ஸ்டாலின் எம்.மாமன்ற உறுப்பினர்கள் எம்.இ.சேகர், கே.வி.திலகர், கமல், ரமணி மாதவன், மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.ரசூல்தீன் ஆர். ராக்கேஷ் ஆர்.கர்ணல் க.பிருந்தாவணன், எம். சி.எழிலரசு, கே. ராஜ்குமார், ஏ.முரளி, பி.சங்கர், ஜி.குப்புசாமி, எம்.ஆர்.சதீஷ். மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், எம். கே.அரிதாஸ், கே. விவேக்குமார், மின்னி ஜான், மீசை என்.செல்வராஜ், வி.செல்வகுமார், ஜஷ்வந்த்நகர் டில்லி ராஜா, டி.கன்னியப்பன், பகுதிகழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், அமுதா ராமச்சந்திரன், எம்.எம்.சசிகுமார், ஆர். ஜெய்சங்கர், ஆர்.நாகராஜன் மா.பழனிவேல், 91,வது வட்ட கழக நிர்வாகிகள், டி.தாமோதரன், பி. ராஜேந்திரன் எம்.செல்வகுமார், எஸ்.கஜலட்சுமி, ஏ. அப்பாசாமி, எம்.கோபி, ஆர். ஆனந்தஜோதி, ஜே.சௌரி, கே.சண்முகம், கோ.மணி, எஸ்.சண்முகம், கே.கே.முனீஸ்வரன், அகார்த்திக், என். வடிவேல், பி.முத்துக்குமார், பி.சுரேஷ், வி.ஐசக், பி.ராமானுஜம், பி.அகஸ்டின், எஸ்.வி.செந்தில்குமார், ஆர்.ராம்குமார், பி.தயாநிதி, எம்.கே.பி. ஜெய சீலன் பி.மோகனகிருஷ்ணன், டி.சங்கர், ஜே. ரூபன் ஐசக், 91, வட்ட மகளிரணி, ஏ.செண்பகம், ஜி. வசந்தி, எஸ்.பியுலா, எம். ராஜலட்சுமி, டி.ருக்மிணி, பி.அறிவுக்கண்ணு, கே.கஸ்தூரி, ஒய்.சுமதி, ஏ.உமா, எஸ்.ஜானகி. 91,வட்ட இளைஞரணி, பி.அப்பு (எ) மணிவண்ணன் , வி.யோகேஷ்வரன், எஸ். மணிகண்டன், வி.கௌசிக், மற்றும் மாவட்ட, பகுதி,வட்டகழக, நிர்வாகிகள், கழக உறுப்பினர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

## தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு!

### மாவட்ட-மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம் - இடம், தேதி மாற்றம்!

### செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட & மாநகர தலைவர், துணைத்தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கூட்டம் நாளை ( செப்.6) நடைபெறவிருந்த நிலையில், இடம், தேதி மாற்றம் செய்யப்பட்டு 07.09.2023 வியாழக்கிழமை அன்று சென்னை இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. காலை 10 மணிக்கு துவங்கும் இந்நிகழ்வில் கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக துணைப் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு பொறுப்பாளர் அந்தியூர் செல்வராஜ், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி.கே.எஸ். மஸ்தான், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றவிருக்கின்றனர்.

இதில், அனைத்து மாவட்ட, மாநகர கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள்: முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை ஒட்டி, தலைவரின் சமூகநீதி மற்றும் மதசார்பின்மை கோட்பாடுகள், கொள்கைகள், செயல்பாடுகள், உள்ளூர் நிகழ்ச்சிகளாக, ஆவணப்படங்களாக. கருத்தரங்கமாக, சமத்துவம் போற்றும் சமபந்தி உபசரிப்பாக நடத்துவது குறித்து.

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் மரக்காணம் ஊராட்சி கம்மந்தாங்கல் கிராமத்தில்முதலமைச்சர் சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் புதிய தார் சாலை அமைப்பதற்கு சிறுபான்மையினர்நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார் அருகில் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன் உள்ளனர்.



சேலம் கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் வாழப்பாடி பேருந்து நிலையம் அம்பேத்கர் சிலை முன்பு அனிதாவின் படத்திற்கு மலர் தூவி வீரவணக்கம் செலுத்தினர். இதில் மாநில மாணவரணி துணைச் செயலாளர் வழக்கறிஞர் தமிழரசன், கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன், வாழப்பாடி ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி மற்றும் மாணவரணி நிர்வாகிகள் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சேலத்தில் வரும் டிசம்பர் 17 ஆம் தேதி நடைபெறும் இளைஞர் அணி மாநாட்டிற்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக இளைஞர் அணி 2 வது மாநாட்டு நிதியாக ரூ. 10 லட்சத்தை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் ஆகியோரிடம் நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கலைவாணன், ரமேஷ்குமார், கார்த்திக், பிரபாகரன் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி, தீர்மானக் குழு செலாளர் பார்.இளங்கோவன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்!

# தமிழ்நாட்டில் 100 தொகுதிகளில் - பயனாளிகள் பதிவு செய்யும் 100 சிறப்பு முகாம்கள்!

## சைதையில் மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.5-

தமிழ்நாட்டில் 100 தொகுதிகளில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு பயனாளிகள் பதிவு செய்யும் சிறப்பு முகாம் ஒரே நாளில் நடத்தப்படும் என்று சைதாப்பேட்டை தொகுதியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு பயனாளிகள் பதிவு செய்யும் சிறப்பு முகாமினை மூன்று இடங்களில் தொடங்கி வைத்துப் பேசுகையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

அதன் விபரம் வருமாறு:

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (03.9.2023) சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 139 வது வார்டு, ஜாபர்கான் பேட்டை, சென்னை உயர்நிலைப் பள்ளி, 140 வது வார்டு, மேற்கு மாம்பலம், சென்னை மாநகராட்சி பல்நோக்கு கட்டிடம் மற்றும் 142 வது வார்டு, மாந்தோப்பு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், பயனாளிகள் பதிவு செய்யும் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 23.07.2009 அன்று முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தில் 1.43 கோடி குடும்பங்கள் பயனாளிகளாக சேர்க்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களால் 11.01.2022 முதல் 5 ஆண்டுகளுக்கு ரூ.7,730 கோடி (ஆண்டுக்கு ரூ.1,546 கோடி) இத்திட்டத்தின் மூலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் யுனிடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதில் அரசு மருத்துவமனைகள் 853, தனியார் மருத்துவமனைகள் 969 ஆக மொத்தம் 1822 மருத்துவமனைகள் இக்காப்பீட்டு திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றன. இக்காப்பீட்டுத்திட்டத்தில் 1513 மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை முறைகளும், 8 சிறப்பு அறுவை சிகிச்சை முறைகளும், 52 முழுமையான பரிசோதனை முறைகளும், 11 தொடர் சிகிச்சை முறைகளும் உள்ளன. ஒன்றிய அரசும் மற்றும் தமிழ்நாடு அரசும் இணைந்து 11.09.2018 அன்று இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு 23.09.2018 அன்று முதல் துவங்கப்பட்டது. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படும் பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டம் தொடங்கப்பட்டு 2023 செப்டம்பர் மாதம் 5 ஆண்டுகள் நிறைவடைகிறது.

**மாநில அரசின் பங்களிப்பு!**

தமிழ்நாட்டில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் உள்ள 1.43 கோடி குடும்பங்களுக்குள் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தின் கீழ் சமூக, பொருளாதார, சாதி வாரியாக 86,48,748 குடும்பங்கள் கண்டறியப்பட்டு இத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ளனர். இத்திட்டத்தில் ஒரு குடும்பத்திற்கு ஓர் ஆண்டிற்கு ரூ.5 இலட்சம் வரை காப்பீட்டுத் தொகையில் சிகிச்சை மேற்கொள்ளலாம். இத்திட்டத்தில் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் பங்களிப்பு 60 : 40 விழுக்காடு ஆகும்.

முதமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத்திட்டத்தின்கீழ் 23.07.2009 முதல் 15.08.2023 வரை 1,30,85,392 பயனாளிகள் ரூ.12,091 கோடி காப்பீட்டுத் தொகையில் பயனடைந்துள்ளனர். 1,44,59,810 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.849/ வீதம் மொத்த காப்புறுதி தொகை ரூ.1227,63,78,690/(1227.63 கோடி) ஆகும். பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தின் கீழ் சமூக, பொருளாதார, சாதி வாரியான கணக்கெடுப்பின்படி, 86,48,748 குடும்பங்களுக்கு நிர்வாக கட்டணம் ரூ.50/வீதம் ரூ.43,24,37,400/ (ரூ.43.24 கோடி) பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தின் மொத்த காப்புறுதி கட்டணத் தொகை ரூ.7,77,52,24,452/ (ரூ.777.52 கோடி) ஆகும்.

பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தில் ஒன்றிய அரசின் பங்களிப்பு 60 விழுக்காடு ரூ.466,51,34,671/ (ரூ.466.51 கோடி) பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தில் மாநில அரசின் பங்களிப்பு 40 விழுக்காடு ரூ.311,00,89,781/ (ரூ.311 கோடி) ஆக மொத்தம் மொத்த செலவினம் ரூ.761,12,44,019/ (ரூ.761.12 கோடி) ஆகும்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா காப்பீடு திட்ட பயனாளிகளுக்கும் சிகிச்சை வழங்கப்படுவதுடன், பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா காப்பீடு திட்ட அட்டை பெற்றுள்ள பிற மாநிலத்தவர்களுக்கும் சிகிச்சை வழங்க உரிய வழிவகை செய்யப்பட்டுள்ளது. 18.09.2018 முதல் 28.08.2023 வரையிலான முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படும் பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டம் தொடங்கப்பட்டத்திலிருந்து மொத்த பயனாளிகள் (1.43 கோடி குடும்பங்களில்) 31,27,029 பேர் ரூ.4,780 கோடி காப்பீட்டுத் தொகையில் பயனடைந்துள்ளனர். இதில் ஒருங்கிணைந்த பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா காப்பீட்டு திட்டத்தின் கீழ் (86,48,748 இலட்சம் குடும்பங்களில்) 16,75,403 பயனாளிகள் ரூ.2,574 கோடி காப்பீட்டுத் தொகையில் பயனடைந்துள்ளனர்.

**மருத்துவக் காப்பீடு தொடர்பான ஒப்பீடு:**

கடந்த ஆட்சியில் மருத்துவ காப்பீட்டுக்கான பிரிமியம் தொகை ஒரு வருடத்திற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.699/ ஆக இருந்தது, இந்த ஆட்சியில் ரூ.849/ ஆக உயர்த்தப்பட்டது. கடந்த ஆட்சி காலத்தில் காப்புறுதித் தொகை ஒவ்வொரு வருடத்திற்கும் ரூ.2 இலட்சமாக இருந்தது, தற்போதைய ஆட்சியில் ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

கடந்த ஆட்சிக்காலத்தில் சிகிச்சை முறைகள் 1450 ஆக இருந்தது, தற்போதைய ஆட்சியில் 1513 ஆக உயர்த்தப்பட்டது. கடந்த ஆட்சியில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் எண்ணிக்கை 970, தற்போதைய ஆட்சியில் 1829 மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்பட்டு எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் பிரத்யேக சிகிச்சை முறைகளின் எண்ணிக்கை 2, தற்போதைய ஆட்சிக் காலத்தில் 8 ஆக உயர்ந்துள்ளது. அந்த வகையில் காப்பீட்டு திட்டம் என்பது பெரிய அளவில் பயன்பாட்டில் இருக்கின்றது. அதேபோல் முதலமைச்சரின் காப்பீட்டு திட்டத்தின் மூலம் பெரிய அளவில் இன்னொரு சிறப்பான திட்டமும் உள்ளது. இன்னுயிர் காப்போம் நம்மை காப்போம் 48 திட்டத்தின் படி, 2021 டிசம்பர் திங்கள் 18 ஆம் தேதி முதலமைச்சர் அவர்களால் மேல்மருவத்தூர் மருத்துவ கல்லூரியில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

விபத்துகளில் சிக்குபவர்களுக்கு உடனடியாக அவர்களைக் காக்கும் பொருட்டு, முதல் 48 மணி நேரத்தில் ஒரு லட்சம் ரூபாய் தரும் வகையில் அந்தத் திட்டம் அப்போது தொடங்கி வைக்கப்பட்டது. அத்திட்டத்தின் மூலம் இதுவரை பயன் பெற்றுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 1,81,860 பேர், இதன் மூலம் அரசின் காப்பீட்டு திட்டத்தின் மூலம் செலவழிக்கப்பட்டுள்ள தொகை ரூ.159.48 கோடி ஆகும். இதில் அரசு மருத்துவமனைகளில் 237களிலும், தனியார் மருத்துவமனைகள் 455களிலும் ஒட்டு மொத்தமாக 692 மருத்துவமனைகளில் இத்திட்டம் பயன்பாட்டில் இருக்கின்றது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தினை பொறுத்தவரை இந்தியாவிற்கே வழிகாட்டும் அமைப்பாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் யாரும் விடுபட்டு போகக் கூடாது என்கின்ற வகையில் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்த சிறப்பு முகாம்கள் இன்றைக்கு தொடங்கி வைக்கப்பட்டு இருக்கிறது. மிக விரைவில் தமிழ்நாட்டில் 100 தொகுதிகளில் 100 சிறப்பு முகாம்கள் ஒரே நாளில் நடத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், உயரலுவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் து.கோபிநாத் ஏற்பாட்டில் சிக்கனா அரசு கலைக் கல்லூரியில் நீட் எதிர்ப்பு போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வில் மாணவி அனிதாவின் திருஉருவப் படத்திற்கு திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் – திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.இதில் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன், பகுதி செயலாளர் மியாமி ஆ.அய்யப்பன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.குணராஜ், வடக்கு மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, வட்டக்கழக செயலாளர் செந்தில்குமார், மாமன்ற உறுப்பினர் வெ.ராதாகிருஷ்ணன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் கோபு, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் எம்.எஸ். மணி உள்பட கல்லூரி மாணவ, மாணவியர், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், நரிக்குடி குறுவட்டம், இசலி கிராமம் சண்முக முனீஸ்வரன் கடந்த 06.08.2023 அன்று மின்னல் தாக்கி இறந்ததன் பொருட்டு பேரிடர் நிவாரண நிதியின் மூலம் ரூ.4,00,000/ (ரூபாய் நான்கு இலட்சம்) இறந்த நபரின் மனைவி திருமதி.யோகிதா அவர்களுக்கு வங்கிக் கணக்கில் வரவு வைப்பதற்கான ஆணையை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

### கழக மகளிரணிப் புரவலர் - மறைந்த

# திருமதி நூர்ஜகான் பேகம் 5 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## திருவுருவப் படத்திற்கு - பொன்.முத்துராமலிங்கம் - டி.கே.எஸ்.இளங்கோவன் - ஐ.பி.செந்தில்குமார் மரியாதை!

திண்டுக்கல், செப்.5-

கழக மாநில மகளிரணி புரவலர் மறைந்த நூர்ஜஹான் பேகம் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளையொட்டி செப்டம்பர் 1 ஆம் தேதி திண்டுக்கல்லில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும் பழநி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார், அரசு தலைமைக் கொறடா கோ.வி.செழியன், கழக முன்னாள் கொள்கை பரப்பு இணைச் செயலாளர் புதுக்கோட்டை விஜயா, மாநில மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் சத்யா பழனிக்குமார், தலைவர் கலைஞர் அவர்களின் செய்தித் தொடர்பு அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்ற மருத விநாயகம், திண்டுக்கல் மாநகர மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், திண்டுக்கல் மாநகர துணை மேயரும் மாநகர் செயலாளருமான ராஜப்பா,

கழக சொற்பொழிவாளர்கள் கரூர் முரளி, சரவெடி சரத்பாலா, போடி காமராஜ், திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழக மற்றும் திண்டுக்கல் மாநகர் கழக நிர்வாகிகள், திண்டுக்கல் மாவட்ட மற்றும் மாநகர் கழக மகளிரணி நிர்வாகிகள், திண்டுக்கல் நகர முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்று, நூர்ஜகான் பேகம் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு வகிதா பேகம் மற்றும் திண்டுக்கல் மாநகர, பகுதிக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

### திருப்பூர் வடக்கு மாவட்ட பாக முகவர்கள் (BLA 2) கூட்டம்!

# கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., பங்கேற்பு!

## மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., அறிக்கை!



திருப்பூர், செப்.5-

திருப்பூர் வடக்கு மாவட்ட பாக முகவர்கள் (BLA 2) கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார் என்று திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருப்பூர்வடக்குமாவட்ட கழகத்திற்கு உட்பட்ட அவிநாசி சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் (BLA 2) கூட்டம் 08.09.2023 வெள்ளிக்கிழமை அன்று அவிநாசி ராபா மஹாலில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் ஆகிய எனது தலைமையில் கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி வரவேற்புரையில் ஒன்றிய கழக செயலாளர்கள் ஈ.பா.சிவப்பிரகாஷ் அவிநாசி, எஸ்.ஆர்.பழனிசாமி திருமுருகன் பூண்டி, க.பால்ராஜ் சேவூர், என்.பழனிசாமி அன்னூர் வடக்கு, அன்னூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் மு.தனபால், திருமுருகன் பூண்டி நகர செயலாளர் மூர்த்தி (எ) கிருஷ்ணசாமி, பேரூர் கழக செயலாளர்கள் வ.வசந்தகுமார் அவினாசி, இரா.பரமேஸ்வரன் அன்னூர் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் பாக முகவர்கள் (BLA 2) கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் (BLA 2) திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் ஆகிய எனது தலைமையில் திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.முநாகராசன், வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் இன்று (05.09.2023) காலை 09.00 மணியளவில் கருவம்பாளையம் பகுதி செயலாளர் மியாமி ஆ.அய்யப்பன் ஏற்பாட்டில் மாவட்டக் கழக அலுவலகத்திலும், மாலை 04.00 மணியளவில் ஆண்டிபாளையம் பகுதி செயலாளர் ப.முருகசாமி, முத்தனம்பாளையம் பகுதி செயலாளர் எஸ்.என்.குமார், வீரபாண்டி பகுதி செயலாளர் அ.கோவிந்தராஜ் ஆகியோர் ஏற்பாட்டில் மாவட்டக் கழக அலுவலகத்திலும், நாளை (06.09.2023) காலை 09.00 மணியளவில் வாலிபாளையம் பகுதி செயலாளர் மு.க.உசேன் ஏற்பாட்டில் மாவட்டக் கழக அலுவலகத்திலும், மாலை 04.00 மணியளவில் நல்லூர் பகுதி செயலாளர் மேங்கோ அ.பழனிசாமி ஏற்பாட்டில் மாவட்டக் கழக அலுவலகத்திலும், 07.09.2023 அன்று மாலை 04.00 மணியளவில் பாண்டியன் நகர் பகுதி செயலாளர் வெ.ஜோதி ஏற்பாட்டில் மாவட்டக் கழக அலுவலகத்திலும், 08.09.2023 அன்று மாலை 04.00 மணியளவில் கொங்கு நகர் பகுதி செயலாளர் போலார் ரா.சம்பத்குமார் ஏற்பாட்டில் மாவட்டக் கழக அலுவலகத்திலும், 09.09.2023 அன்று மாலை 04.00 மணியளவில் அண்ணா காலனி பகுதி செயலாளர் மின்னல் அ.நாகராஜ் ஏற்பாட்டில் மாவட்டக் கழக அலுவலகத்திலும், 10.09.2023 அன்று மாலை 04.00 மணியளவில் வேலம்பாளையம் பகுதி செயலாளர் கொ.இராமதாஸ் ஏற்பாட்டில் மாவட்டக் கழக அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது,

பல்லடம் சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் (BLA 2) திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் ஆகிய எனது தலைமையில் வடக்கு மாவட்ட அவைத்தலைவர் கா.நடராஜன், துணைச் செயலாளர், பொங்கல் ஒன்றியக்குழு பெருந்தலைவர் வழக்கறிஞர் எஸ்.குமார், திருப்பூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் வெ.ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் இன்று (05.09.2023) மாலை 04.00 மணியளவில் பொங்கலூர் மேற்கு ஒன்றிய செயலாளர் பெ. அசோகன் ஏற்பாட்டில் ஆரியாஸ் ஹோட்டலிலும், நாளை (06.09.2023) காலை 10.00 மணியளவில் பொங்கலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சா.பாலுசாமி ஏற்பாட்டில் உகாயனூர் கழக அலுவலகத்திலும், நாளை (06.09.2023) மாலை 04.00 மணியளவில் பல்லடம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ந.சோமசுந்தரம் ஏற்பாட்டில் ஒன்றிய கழக அலு வலகத்திலும், 07.09.2023 அன்று காலை 10.00 மணியளவில் பல்லடம் மேற்கு ஒன்றிய செயலாளர் சு.கிருஷ்ணமூர்த்தி ஏற்பாட்டில் ஒன்றிய கழக அலுவலகத்திலும், 07.09.2023 அன்று மாலை 04.00 மணியளவில் பல்லடம் நகர செயலாளர் ந.ராஜேந்திரகுமார் ஏற்பாட்டில் நகர கழக அலுவலகத்திலும், 08.09.2023 அன்று மாலை 04.00 மணியளவில் திருப்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பி.விஸ்வலிங்கசாமி ஏற்பாட்டில் மங்கலம், சுல்தான்பேட்டை அம்மன் கலையரங்கத்திலும், 09.09.2023 அன்று காலை 10.00 மணியளவில் திருப்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் என்.விஸ்வ நாதன் ஏற்பாட்டில் பெருமாநல்லூர் அம்மன் மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

இதில் டிஜிட்டல் எஸ்.சேகர், வழக்கறிஞர் சி.கே.நந்தினி, சு.சாமிநாதன், சி.கோவிந்தசாமி, எஸ்.சரவணன் நம்பி, பா.குணராஜ், பி.கே.கனகராஜு, சலீம் (எ) அப்துல் ரகுமான், எஸ்.எம்.மஸ்ஊது, ப.சண்முகசுந்தரம், செ.உமாமகேஸ்வரி, மு.முகமது ரஃபி, ஆர்.தங்கவேல், மு.நாச்சிமுத்து, ப.கணேசன், துணைச் செயலாளர்கள் பி.ஆர்.செந்தில்குமார், ப.பாஸ்கரன், க.மகாலட்சுமி,ஜி.முத்துகிருஷ்ணன், ரா.முருகேஷ், ச.ராமகிருஷ்ணன், அ.சுப்பிரமணியம், பி.தங்கராஜ், எஸ்.பழனிசாமி, மு.க.அசேன், மு.முகமது சபி, வி.பி.மகேந்திரன், இரா.தம்பி வடிவேல், அ.ராமசாமி, வே.செங்குட்டுவன், மு.தேவி, அ.சரவணகுமார், சி.வெள்ளைச்சாமி, மூர்த்தி, அ.ஆறுச்சாமி, ச.மகேந்திரன், செ.முருகன், மா.தாமோதரன், மு.வேலுச்சாமி, சி.பாலசுப்பிரமணி, க.சுப்பிரமணியன் உள்ளிட்ட நிர்வாகிகள் அவர்கள் பகுதியில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பாக நடத்தி தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கழக மாநில மகளிரணிப் புரவலர் மறைந்த நூர்ஜஹான் பேகம் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளையொட்டி திண்டுக்கல்லில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும் பழநி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில் குமார், அரசு தலைமைக் கொறடா கோ.வி.செழியன், கழக முன்னாள் கொள்கை பரப்பு இணைச் செயலாளர் புதுக்கோட்டை விஜயா, மாநில மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் சத்யா பழனிக்குமார், தலைவர் கலைஞர் அவர்களின் செய்தித் தொடர்பு அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்ற மருத விநாயகம்,, திண்டுக்கல் மாநகர மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், திண்டுக்கல் மாநகர துணை மேயரும் மாநகர் செயலாளருமான ராஜப்பா, கழக சொற்பொழிவாளர்கள் கரூர் முரளி, சரவெடி சரத்பாலா, போடி காமராஜ், உள்ளிட்ட பலரும் நூர்ஜகான் பேகம் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சிக்கு வகிதாபேகம் ஏற்பாடு செய்திருந்தார்.



திருச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருச்சி தி.மு.க. தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில், திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான கைப்பந்து போட்டியில், ஆண்கள் பிரிவில் ஜமால் முஹம்மது கல்லூரி அணி முதலிடமும், தமிழ்நாடு காவல் துறை அணி 2வது இடத்தையும் பிடித்தது. அதேபோல பெண்கள் பிரிவில் தமிழ்நாடு காவல் துறை அணி முதலிடமும், ஜமால் முகமது கல்லூரி அணி 2வது இடத்தையும் பிடித்தது. வெற்றிபெற்ற இந்த அணிகளுக்கு வெற்றிக்கான கோப்பையும், பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், இனிக்கோ இருதயராஜ் எம்.எல்.ஏ., மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, கிழக்கு மாநகரச் செயலாளர் மதிவாணன் ஆகியோர் வழங்கி பாராட்டினர்.

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் - கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி.- ஏ.கே.பி.சின்ராஜ் எம்.பி. முன்னிலை!ரூ. 854.37 கோடி மதிப்பீட்டில்

# ராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அடிக்கல்! ரூ.8 கோடி மதிப்பில் நலத்திட்டங்கள்!

## அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்து வழங்கினார்!

நாமக்கல், செப். 5-

நாமக்கல் மாவட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் ராசிபுரம் கோனேரிப்பட்டி ராசிபுரம் ஆத்தூர் சாலை கொங்கு மண்டபம் எதிரில் ராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. ராசிபுரம் நகராட்சி 8 பேரூராட்சிகள் 4 ஊராட்சி ஒன்றியங்களில் 523 குடியிருப்புகளுக்கான ரூட் 854.37 கோடி மதிப்பீட்டில் கூட்டு குடிநீர் திட்டம் அடிக்கல் நாட்டு விழாவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை பொறியாளர் கே.செல்லமுத்து வரவேற்பு உரை ஆற்றினார்.

நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் சிறப்புரையாற்றினார். விழாவில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு கூட்டு குடிநீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி, 544 பயனாளிகளுக்கு ரூ. 8 கோடியே 12 லட்சத்து 18 ஆயிரத்து 246 மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி, பேருரை ஆற்றினார்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி, திருச்செங்கோடு ஈ.ஆர்.ஈஸ்வரன், மாவட்ட ஊராட்சி தலைவர் ஆர். சாரதா, மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் மு.செந்தில்குமார், ராசிபுரம் நகர மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

விழாவில் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்கள் ராசிபுரம் கே.பி.ஜெகநாதன், வெண்ணந்தூர் பி.தங்கம்மாள், நாமகிரிப்பேட்டை கே.ராஜேந்திரன், புதுச்சத்திரம் வெ.சாந்தி, நாமக்கல் நகர் மன்ற தலைவர் து.கலாநிதி. மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ரா.துரைசாமி, பெ.ராஜேந்திரன், ச.வடிவேலன், அ.ராஜாத்தி, பேரூராட்சி தலைவர்கள் நாமகிரிப்பேட்டை மு.சேகரன், பட்டணம் ரா.போதம்மாள், சீ ரா ப் ப ள் ளி கொ.லோகாம்பாள், ஆர். புதுப்பட்டி பொ.சுமதி, வெண்ணந்தூர் ஆர்.எஸ். எஸ். ராஜேஷ், பிள்ளாநல்லூர் அ.சுப்பிரமணியம், அத்தனூர் ரா.சின்னசாமி, மல்லசமுத்திரம் மு.திருமலை,

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், சேலம் மாவட்டச் செயலாளர்கள் இரா. ராஜேந்திரன் எம்.எல்,ஏ., எஸ். ஆர். சிவலிங்கம், டி. எம். செல்வகணபதி, சேலம் மேயர் ராமச்சந்திரன், மாநில நிர்வாகிகள் ப.ராணி, நக்கீரன், சி.ஆனந்தகுமார், முத்துவேல் இராமசுவாமி, மாவட்ட பொருளாளர் ஏ. கே. பாலச்சந்திரன், அரசு வழக்கறிஞர் செல்வம், துணை செயலாளர் நலங்கிள்ளி, தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் மாயவன், பொதுக்குழு உறுப்பினர்கள் சுசிதரன், காளியப்பன், நகர செயலாளர்கள் என்.ஆர்.சங்கர், ராணா ஆர். ஆனந்த், அ.சிவக்குமார், எஸ்.பூபதி, ஒன்றிய கழக செயலாளர்கள் அ.அசோக்குமார், கே.பி. இராமசுவாமி, ஆர்.எம். துரைசாமி, பெ.நவலடி, கே.பி.ஜெகநாதன், பாலசுப்பிரமணியன், எம். பி.கௌதம், வி.கே.பழனிவேல். ஜெயபிரகாஷ், செந்தில் முருகன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இறுதியாக சேலம் நாமக்கல் வட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வை பொறியாளர் சி.மதியழகன் நன்றி கூறினார்.

### தி.மு.க. கொள்கை பிடிப்புள்ள கட்சி!

# நாடாளுமன்றத் தேர்தலில் மோடி தோற்பது உறுதி!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!



திருச்சி, செப். 5-

தி.மு.க. கொள்கை பிடிப்புள்ள கட்சி. நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வும், மோடியும் தோற்பது உறுதி என அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி குறிப்பிட்டார்.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. பாலக்கரை பகுதி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் எடத்தெருவில் நடந்தது. கூட்டத்துக்கு பகுதிச் செயலாளர் டி.பி.எஸ்.எஸ். ராஜ்முகமது தலைமை வகித்தார்.

திருச்சி மாநகரச் செயலாளரும்,மண்டலக் குழுத் தலைவருமான மதிவானன் முன்னிலை வகித்தார். திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது: -

தமிழகத்தில் மக்களுக்கான நல்லாட்சி நடந்து வருகிறது. மக்கள் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்று வெற்றிக்கனியை தலைவரின் கையில் சமர்ப்பிக்க ஒன்றிணைந்து பாடு படுவோம் .

இவ்வாறு அவர் பேசினார் .

**அமைச்சர் ராஜ கண்ணப்பன் பேச்சு!**

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ராஜ கண்ணப்பன் கலந்து கொண்டு பேசியதாவது:-

திராவிட இயக்கம் இல்லை என்றால் தமிழ்நாடு கிடையாது. பிரதமர் மோடி ராமநாதபுரத்திற்கு வந்தாலும், தமிழகத்துக்கு எங்கு வந்தாலும் பயப்பட மாட்டோம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வரை கொண்டுள்ள நாங்கள், அமித்ஷா கையில் ஆர்டரை வாங்கி வைத்துக் கொண்டுள்ள கவர்னருக்கு பயப்பட மாட்டோம். ஏழரை லட்சம் கோடி ஊழல் செய்துள்ள பா.ஜ. அரசை எதிர்க்க 28 கட்சிகள் இணைந்துள்ளதால், லோக்சபா தேர்தலில் போட்டி கடுமையாக இருக்கும். குஜராத், உ.பி. தவிர பா.ஜ. மற்ற மாநிலங்களில் வெற்றி பெற முடியாது.குறிப்பாக, தென் இந்திய மாநிலங்களில் பா.ஜ.க. ஒரு இடம் கூட பெற முடியாது .

பா.ஜ.வில் உள்ளவர்கள் மதத்தை பற்றி மட்டுமே பேசுகின்றனர். ஆனால், தி.மு.க.வில் உள்ளவர்கள் திராவிடத்தை மட்டும் பேசுகிறோம். நமக்கு எதிரி பா.ஜ. மட்டும் தான். மற்றவர்கள் எல்லாம் எதிரி கிடையாது. அ.தி.மு.க. வெல்லாம் கட்சியே கிடையாது. லோக்சபா தேர்தலில் ஒரு தொகுதியில் கூட அ.தி.மு.க. வெற்றி பெற முடியாது. அரசுப்பள்ளிகளில் ரூ.404 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ள காலை உணவு திட்டத்தால் பள்ளிகளில் 40 சதவீத வருகை கூடியுள்ளது.

முதல்வரும், அமைச்சரவையும் எடுக்கும் முடிவுக்கு ஒப்புதல் அளிப்பது தான் கவர்னரின் வேலை. அதை செய்யாத கவர்னர் நமக்கு தேவையே இல்லை.

இப்படி பேசுவதால் வழக்கு பதிந்து கைது செய்தாலும் செய்து கொள்ளட்டும் நாங்கள் யாருக்கும் பயப்படமாட்டோம் யாரை வைத்து என்ன செய்தாலும் இந்த தேர்தலில் பா.ஜ.க.வும் மோடியும் தோற்பது உறுதி. தி.மு.க. அதன் கொள்கை பிடிப்பில் கட்சியாக செயல்படுகின்றது.

இவ்வாறு அமைச்சர் ராஜ கண்ணப்பன் பேசினார் .

இக்கூட்டத்தில் மாநகரச் செயலாளர் மதிவாணன், துணை மேயர் திவ்யா பகுதி கழகச் செயலாளர் ஏ.எம்.ஜி. விஜயகுமார், மோகன், ஆர்.ஜி. பாபு, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் செங்குட்டுவன், லீலா வேலு, நூர்ஜகான், பொன் செல்லையா, சரோஜினி வெங்கட்ராஜ், வட்டச் செயலாளர்கள் எடிங்டன், கோவிந்தராஜ் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக மாவட்ட அயலக அணி அமைப்பாளர் அடைக்கலராஜா வரவேற்புரை ஆற்றினார்.

### ஆதித்யா எல்-1 திட்ட இயக்குநராக உயர்ந்து சாதித்துள்ள

# தமிழ்ப் பெண்மணி நிகர்ஷாஜிக்கு பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, செப். 5 -

ஆதித்யா எல்.1 திட்ட இயக்குநராக உயர்ந்து சாதித்துள்ள தமிழ்ப் பெண்மணி நிகர்ஷாஜிக்கு அகம் மகிழ்ந்த பாராட்டுகள் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பாராட்டியுள்ளார்.

அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**தென்காசி மாவட்டத்தின் செங்கோட்டையில் பிறந்து, சூரியனை ஆய்வுசெய்யும் இந்தியாவின் முதல் விண்கலமான ஆதித்யா எல்1 திட்ட இயக்குநராக உயர்ந்து சாதித்துள்ள தமிழ்ப் பெண்மணி நிகர் ஷாஜி அவர்களை அகமகிழ்ந்து பாராட்டுகிறேன்.**

**தமிழ்நாட்டின் மாநில அரசுப் பள்ளி, கல்லூரிப் பாடத்திட்டத்தில் பயில்பவர்கள் திறத்திலும் தரத்திலும் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்பதை தொடர்ந்து சந்திரயான் முதல் ஆதித்யா வரை நம் சாதனைத் தமிழர்கள் நிரூபித்துக் கொண்டே இருக்கின்றனர்.**

**இஸ்ரோவின் பெருமைமிகு திட்டத்துக்கு நிகர் சாஜி அவர்கள் தலைமைப் பொறுப்பேற்றிருப்பதைப் பார்த்து அவர்கள் குடும்பத்தினர் எத்தகைய பூரிப்பை, பெருமையை அடைந்திருக்கிறார்களோ அதே அளவுக்கு நானும் பெருமிதம் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டியுள்ளார்.

# கடலூர் மாவட்டத்தில் சாலை விபத்து: உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 5 -

கடலூர் மாவட்டத்தில் சாலைவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்கள் நேற்று முன்தினம் (3.9.2023) வெளியிட்ட அறிவிப்பு வருமாறு :-

கடலூர் மாவட்டம், காட்டு மன்னார்கோயில் வட்டம், மோவூர் மேற்கு கிராமம், பிரதான சாலையில் 29.2023 அன்று இரவு முட்டம் கிராமத்திலிருந்து காட்டுமன்னார்கோயில் நோக்கிச் சென்ற இருசக்கர வாகனமும், காட்டுமன்னார் கோயிலில் இருந்து சென்ற நான்கு சக்கர வாகனமும் எதிர்பாராத விதமாக மோதி ஏற்பட்ட விபத்தில் கடலூர் மாவட்டம், முட்டம் கிராமத்தைச் சேர்ந்த சக்திவேல், (த/பெ. மகேந்திரன்) (வயது 25) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன்.

உயிரிழந்த திரு.சக்திவேல் அவர்களின் பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாயும், இவ்விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் திரு.அஜித் மற்றும் திரு.சுபாஷ் சந்திரபோஸ் ஆகிய இருவருக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்திரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் மூலம் அரசுப் பள்ளிகளில் பயிலும்

# மாணவ-மாணவிகளின் உடல் ஊட்டச்சத்துப் பிரச்சினை நீங்கியுள்ளது!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேடு வரவேற்றுப் பாராட்டு!

சென்னை, செப். 5 -

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவிகளின் ஊட்டச்சத்து பிரச்சினை நீங்கி, உடல் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக ‘தி ஹிந்து’ ஆங்கில நாளேடு பாராட்டு தெரிவித்துள்ளது. இதேபோல் அரசு பள்ளிகளில் மாணவர்களின் வருகை கணிசமாக உயர்ந்திருப்பதாகவும் அந்த நாளேடு வரவேற்பு தெரிவித்துள்ளது.

சுடச்சுட சாம்பாருடன் பொங்கல், கிச்சடி என களைகட்டியிருக்கும் இந்த உணவு வகைகள் அளிக்கப்படும் இடம் ஆடம்பர ஓட்டலோ, விடுதியோ அல்ல. முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்படும் அரசு தொடக்க பள்ளிகள் தான் இவையாகும்.

வசதிபடைத்தவர்களின் குழந்தைகள், தனியார் பள்ளிகளில் கல்வி பயிலும் நிலையில், ஏழை மக்கள், கூலித் தொழிலாளர்கள் உள்ளிட்ட சமூகத்தில் நலிவடைந்தவர்களின் வாரிசுகள் அரசு பள்ளிகளையே கல்விக்காக நம்பியுள்ளனர். தொழிலாளர் குடும்பத்தை சேர்ந்த தாய், தந்தையர், அதிகாலையில் எழுந்து பசியோடு அன்றைய தின வேலைக்குச் சென்றுவிடும் நிலையில், அவர்களின் குழந்தைகள் காலை நேரத்தில் அதே பசியுடன் பள்ளிக்கு வந்து கல்வி பயிலும் நிலை இருந்தது. இதனால் ஊட்டச்சத்து குறைபாடு, எடை குறைவு போன்ற பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொண்டனர்.

இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு, நாட்டின் எதிர்கால சந்ததியினரை வளமான சந்ததியினராக உருவாக்க வேண்டுமென்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, இந்தியாவிலேயே முதல்முறையாக அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக கடந்த 2022-ஆம் ஆண்டு 1,545 அரசு தொடக்க பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் என்ற புரட்சிகரமான திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தின் கீழ், 1 முதல் 5-ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் சுமார் 1 லட்சத்து 14 ஆயிரம் பேருக்கு அரிசி, கோதுமை உணவுகளும், பொங்கல், கிச்சடி, கேசரி, ஸ்வீட் பொங்கல், சேமியா உப்புமா, சாம்பார் உள்ளிட்ட சுவையான உணவுகளும் அளிக்கப்பட்டன.

இதையடுத்து கடந்த ஆகஸ்ட் மாதம் 25-ம் தேதியன்று அனைத்து அரசு பள்ளிகளுக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு அரசு விரிவுபடுத்தியது. ஆண்டுக்கு சுமார் 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் கீழ், 31 ஆயிரத்து 8 அரசு தொடக்க பள்ளிகளில் 17 லட்சம் மாணவ- மாணவிகளுக்கு காலை நேரத்தில் சுடச்சுட சத்தான உணவுகள் அளிக்கப்படுகின்றன.

அதிகாலையில் அரக்க பறக்க எழுந்து வேலைக்குச் செல்லும் ஏழைப் பெற்றோர், காலையில் பசி மயக்கத்தோடு பள்ளியில் இருக்கும் குழந்தைகளை நினைத்துக் கவலைபட்ட நிலையில், அவர்களின் கவலைகளைப் போக்கும் அருமருந்தாக உள்ளது.

இதேபோல், முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு, அரசு தொடக்க பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவிகளின் ஆரோக்கியம் மேம்பட்டிருப்பதாகவும், ஊட்டச்சத்து குறைபாடு, உடல் எடை குறைவு போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்திருக்கிறது.

2022-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதன் முதலில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட 4 மாவட்டங்களில் உள்ள 1,545 அரசு தொடக்க பள்ளிகளில் 1,319 பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரையிலான வகுப்புகளில் மாணவர்களின் வருகை பதிவேடு 85 சதவீதத்துக்கும் மேல் அதிகரித்துள்ளதென்றும், அதாவது 10 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

குறிப்பாக, முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்படும் பள்ளிகளில் வருகை பதிவேடு, அதன் அருகேவுள்ள பள்ளிகளுடன் ஒப்பிடுகையில் 77 சதவீதம் வரை முன்னேற்றம் கண்டிருக்கிறது. அரசு தொடக்க பள்ளி தலைமை ஆசிரியர்கள் சிலர், இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு, வருகை பதிவேடு 2 மடங்கு அதிகரித்துள்ளது என மகிழ்ச்சி தெரிவித்திருக்கின்றன.

இவ்வாறு ‘தி ஹிந்து’ நாளேட்டின் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திராவிட மாடல் ஆட்சியில் அனைவருக்கும் கல்வி புகட்ட மேற்கொள்ளப்படும் சமூக நீதி திட்டங்களை கிண்டலடிக்கும் சில ஏடுகளுக்கு இந்த உண்மை சவுக்கடியாக இருக்கும் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

## சென்னை வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகள் கூட்டம்!

சென்னை, செப். 5 -

சென்னை வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது.

சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் மாநிலத் துணைச் செயலாளர் பழ.செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவது குறித்தும் பசுமை காடுகள் அமைப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் பி.வெங்கடேசன் துணை அமைப்பாளர்கள் ஏகா. கார்த்திகேயன், பா.பாலஉமாபதி, சா. இளஞ்செழியன், சுதர்சன்( எ) மாறன், வேதா செந்தில் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் திருமருகல் வடக்கு ஒன்றியம் பனங்குடி ஊராட்சியில் அ.தி.மு.க., பா.ஜ.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 300 குடும்பத்தினர் அக்கட்சிகளில் இருந்து விலகி நாகை மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் திருமருகல் வடக்கு ஒன்றியச் செயலாளர் செல்வ.செங்குட்டுவன், திட்டச்சேரி பேரூர்ச் செயலாளர் முகமதுசுல்தான், மாவட்டத் தொழிலாளர் அணி அமைப்பாளர் சந்தோஷ் மற்றும் பலர் உள்ளனர்.

# இளைஞர்களே இயக்கத்தின் ஈட்டி முனைகள்..!

*1949-ஆம் ஆண்டு, செப்டம்பர் 17-ஆம் தேதி, சென்னையில் இடைவிடாது கொட்டிக் கொண்டிருந்தது மழை. வடசென்னையில் 'ராபின்சன் பூங்கா' வில் கொட்டும் மழையிலும் மாபெரும் அறிவிப்புக்குக் காத்திருக்கிறது பெரும் இளைஞர் பட்டாளம். அவர்களுக்கெல்லாம் அப்போது வயது சற்றேறக்குறைய 25 முதல் 30-க்குள்தான் இருக்கும்.*

தமிழ்நாட்டு வரலாற்றில் தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டங்களுடன் உதயமான அந்த அரசியல் இயக்கத்தை, உலகுக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறார் அவர்களின் தலைமைப் பொறுப்பேற்ற அண்ணன். அவருக்கு அப்போது வயது 40.

சமூகநீதியின் திசைவழியை உரக்கச் சொன்ன, அந்த அண்ணன் பேரறிஞர் அண்ணா. அவரது தம்பிகள், கலைஞர் உள்ளிட்ட கழக முன்னோடிகள்.

கழகத்தின் தொடக்கக் கால வரலாறு இளைஞர்களிடமிருந்து எழுதப்பட்டதுதான். கழகத்தினரே மறந்த வரலாறும் ஒன்று உண்டு. கழகத்தின் தொடக்கவிழாக் கூட்டம் கோலாகலமாக சென்னையில் நடைபெற்றதென்றாலும், அதற்கு அடுத்த மாதம் கழக அமைப்புகளின் தொடக்க விழா பொதுக்கூட்டங்கள் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நடைபெற்றது. நெல்லையில் 25 வயதேயான இளைஞராகக் கழகக் கொடியேற்றியவர் கலைஞர்.

## அண்ணா அமைத்த அடித்தளம்

நாம் சமகாலத்தில் கொண்டுள்ள அரசியல் எழுச்சி, ஆட்சி அதிகாரத்தின் மூலம் உருவாக்கிய சாதனைகள், உலகுக்கே சமூகநீதியை அறிவிக்கும் உத்வேகம் எல்லாம் அன்றைய இளைஞர்கள் உருவாக்கிய பாதை என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்று நமது அத்தனை பெருமைகளுக்கும் காரணம், அன்றைய இளைஞர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு அடித்தளம் அமைத்ததுதான்.

அந்த வரலாற்றில் பேரறிஞர் அண்ணாவுக்குப் பின், இளைஞர்கள் மீது அதிக அக்கறையும் ஆளுமையும் செலுத்தியவர் கலைஞர்தான்.

இளைஞர்கள் இன உணர்வு பெற வேண்டுமென அவர் 13 வயதில் எழுதிய 'செல்வ சந்திரா' புதினத்திலேயே குறிப்பிட்டவர் கலைஞர். அண்ணாவுக்கு அவரை அறிமுகப்படுத்திய



'இளமைப்பலி' இளையோருக்கு எழுதப்பட்டதுதான். 'லட்சியத்துக்காக இளமையைப் பலி கொடுக்கவும் இதோ தயார் என எழுந்த இளைஞர் கூட்டத்தில் ஒருவன்' எனத் தன்னைக் குறிப்பிட்டுக் கொண்டவர் கலைஞர்.

## இளைஞர்களுக்குப் பாதை!

இளைஞர்கள் எந்த அளவுக்குத் தயாராக வேண்டும் என்பதற்கு கழக வரலாற்றில், ஒரு சம்பவத்தை உதாரணமாகக் காட்ட முடியும்.

1966-ஆம் ஆண்டு, மாணவர் அணியின் சார்பில், தஞ்சையில் ஒரு மாநாடு. மேடையில் கழகத்தின் மூத்த தலைவர்கள் அமர்ந்திருக்கின்றனர். அதைப் பார்த்த அண்ணா, கழகத்தின் மூத்த தலைவர்களை எல்லாம் அழைத்து மேடைக்கு எதிரே அமர்ந்து கொள்ளுங்கள் என்கிறார். 'இது மாணவர்கள் நடத்தும் மாநாடு, ஆகவே அவர்களின் உரையைக் கேட்பதற்காக நான் வந்துள்ளேன். மூத்த தலைவர்கள் பேச வேண்டாம்' என்றும் கட்டளையிட்டார். 'நாற்றங்கால் வளமாக இருந்தால்தானே பயிரும் செழிப்பாக வளர்ந்திட முடியும்' என இந்த நிகழ்வை வர்ணிப்பார் கலைஞர்.

அதே வேட்கையை கலைஞரிடமும் பார்க்க முடியும். திராவிட இனத்தின் கொள்கைகளும் கோட்பாடுகளும் இன்னும் நூறு ஆண்டுகளுக்கு வளர்ந்து செல்ல வேண்டும் எனச் சோர்வில்லாது உழைத்தவர் அவர். அதனால்தான், கட்சிப் பொறுப்புகளிலும் கழகப் பொறுப்புகளிலும் 50:50 என்கிற விகிதத்தில் இளைஞர்களை அமர்த்தினார்.

இந்த உத்தியை அவர் வாய்ப்புகள் அளிப்பதிலும் தவறவிட்டதில்லை. பல நேரங்களில் தனது மனக் கண்களில் இருந்து, கழகத்தின் இளைஞர் அணிக்கு எனப் பல அறைகூவல்களை விடுத்திருக்கிறார் கலைஞர்.

இளைஞர் அணி தொடங்கப்பட்ட பின்னர் முதன்முதலில் 2007-ஆம் ஆண்டு நெல்லையில் மாநாடு நடைபெற்றது. இன்றைய முதலமைச்சர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக அந்த மாநாட்டை வழி நடத்தினார். கலைஞர் இளைஞர் அணியைத் தயார்படுத்துவது மட்டுமல்ல, கழகத்தின் கரத்தை வலுப்படுத்த இளைஞர்களை உரப்படுத்தும் பணிகளையும் செய்தார்.

டிசம்பர் 15, 16 நாட்களில் இளைஞர் அணியின் மாநாடு நடத்த தலைமைக் கழகத்திடம் அனுமதி பெற்றுள்ளார் என கழகத்தின் அமைப்பு ஜனநாயகத்தைச் சுட்டிக்காட்டவும் தவறவில்லை.

## இளைஞர்களுக்கு...

நாம் யார்? நமது இனம் யாது? நமது மொழி எது? மொழிக்காகச் சிந்திய ரத்தம், அடக்குமுறைகள், உயிர்ப்பலிகள் எத்தனை? அவற்றையெல்லாம் நினைத்து, அந்தத் தியாகத்தை நினைத்து உள்ளம் உறுதி பெற வேண்டாமா எனக் கேட்டார் கலைஞர். கழகம் பவளவிழா ஆண்டிலும் கலைஞரின் நூற்றாண்டிலும் நிற்கும் கழகத்தின் தூணாக நிற்போர், இந்த வரலாற்றை மீண்டும் உருவாக்க வேண்டிய கட்டத்தில் நிற்கிறோம்.

இளைஞர்கள் பொறுப்பேற்க வேண்டிய தருணத்தை கலைஞரின் குரலிலேயே அழைப்பாக விடுக்கிறார் நமது முதலமைச்சர்.

இளைஞர் அணியை உருவாக்கி, தாய்க் கழகத்துக்குப் பெருமை சேர்த்தவர், "கலைஞர் நூற்றாண்டில் உள்ளோம் நமக்கான கழகப் பணிகள் காத்திருக்கின்றன. உண்மையான புதிய இந்தியாவை விடியச் செய்யும் பெரும் பொறுப்பினை கழகம் ஏற்றுள்ளது. தாய்க் கழகத்தின் கரங்களை வலுப்படுத்தும் இளைஞர்கள் காலத்தின் தேவை" என்கிறார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 'இளைஞர்கள் ஒரு இயக்கத்தின் ஈட்டி முனைகள்' எனக் கூறுவார். ஆனால், கலைஞரோ, 'இளைஞர்கள் ஈட்டி முனைகளாக இருப்பதோடு, இயக்கத்துக்கு ஒவ்வொருவரும் ஆயிரக்கணக்கான மக்களைத் திரட்டிடும் முனைகளாக இருக்க வேண்டும்' என்று கூறுவார்.

"வாழ்வின் பயன் என்பது நானும் என் குடும்பமும் மாத்திரம் வளம்பெற்று வாழ்வது அல்ல; ஒட்டுமொத்த சமுதாயமும் நல்வாழ்வு பெறுவதுதான் என்கிற சிந்தனையை உருவாக்கிக் கொள்வதுதான்.

அதற்கென நேர்மையெனும் நீர்ப்பாய்ச்சி, உறுதியெனும் உரமிட்டு, பண்பு எனும் பறம்படித்து, விவேகமெனும் விதை நட்டு, வாடாத பயிராக வளர்ந்து கொண்டிருப்பவன் நான், என கழகத்தின் கோடானகோடி தொண்டர்களுக்குத் தனது வாழ்க்கையைக் குறிப்பிட்டார்.

அந்தப் பயிர் வாடினால் நான் வாடுவேன், பயிர் வளம் செழித்தால் வலிவு கூடும், பொலிவு மிகுந்திடும்" என்பார். கலைஞர் என்கிற ஆயிரம் காலத்து பயிர் எப்போதும் செழித்து வளர இளையோர் அரசியல் பயில வேண்டும். வாழ்வின் பயன் என்ன என உணர வேண்டும். இந்தக் காலம் அதற்கான தேவைகளை உருவாக்கி வருகிறது.

'இளையோர் அரசியல் எழுச்சி பெற , தீரர்களுக்கான அழைப்பு என வீர இளைஞர்காள்! உமை வேண்டுகிறேன்' என 2007-ஆம் ஆண்டு அழைத்தார் கலைஞர். காற்றில் உயிர்பெற்று நிற்கும் கலைஞரின் குரல் கேளாத செவிகளிலும் கேட்கும்.

## :ப்ளாஷ்பேக்



### மூன்று தலைமுறை!



அஜ்மல் கான்

**1985**-ஆம் ஆண்டு கடலூர் மாவட்டம், நெய்வேலிக்கு தலைவர் கலைஞர் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது இளைஞர் அணி பொறுப்பிலிருந்த என் தந்தை அ.அப்துல் காதர் ஜெய்லானி, 5 மாத குழந்தையாக இருந்த என்னை தலைவர் கலைஞர் கரங்களில் கொடுத்து அறிமுகம் செய்தார். நெய்வேலி நகரச் செயலாளர் ராமகிருஷ்ணன், மாவட்டச் செயலாளர் செஞ்சி ராமச்சந்திரன் ஆகியோருடன் என் தாத்தா அப்துல் ரஹீம் அவர்களும் உடனிருந்தார்கள். மூன்று தலைமுறையும் தலைவர் கலைஞருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் என்று என் அப்பா அடிக்கடி இப்புகைப்படத்தைக் காண்பிப்பார். இன்றைக்கு கழக உறுப்பினராக நானும் அந்தப் பணியைத் தொடர்வது மகிழ்ச்சி அளிக்கிறது.

**-மரு.அ.அஜ்மல் கான், மருத்துவர் அணி, நெய்வேலி, கடலூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல் youthwing@dmk.in

### விடுதலைப் போரில் 'அவர்களுக்கு' என்ன பங்கு?






**த**மிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில், சென்னையில் கடந்த 2-ஆம் தேதி சனாதன ஒழிப்பு மாநாடு நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பேச்சு, இந்தியா முழுவதும் சங்பரிவார் கூட்டத்தினரிடையே பதற்றத்தை ஏற்படுத்தி இருப்பதைப் பார்க்க முடிகிறது. அதைப் போலவே அந்த நிகழ்ச்சியில் அவர் வெளியிட்ட 'இந்திய விடுதலைப் போரில் ஆர்.எஸ்.எஸ்'-இன் பங்கு என்கிற நூலும் பெரும் கவனம் பெற்றதுடன், அது தொடர்பாக வீடியோக்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

அந்த நூலில் முதற்பக்கத்தில் பிரிட்டிஷாரிடம் மன்னிப்புக் கேட்ட சாவர்க்கர் ஓவியமும், இரண்டாவது பக்கத்தில் காந்தியை கோட்சே கொன்ற ஓவியமும் உள்ளன. மூன்றாவது பக்கத்தில் இருந்து முழுவதும் காலி பக்கங்கள்தான். அதைப் பார்த்த அமைச்சர், மூன்றாவது பக்கத்தில் மூன்று பூஜ்ஜியங்களைப் போட்டு ஆர்.எஸ்.எஸ். பங்கினை அம்பலப்படுத்தினார். விடுதலைப் போராட்டத்தில் அவர்கள் எந்தப் பங்கும் வகிக்கவில்லை என்பதைப் பல பக்கங்களுக்கு எழுதுவது, பேசியதைவிட, அந்த ஒரு நவீன வடிவம் பார்வையாளர்களுக்கு உண்மையைக் கடத்திவிட்டது.

### கருவூலம்
### தன்னம்பிக்கைத் தலைவர்!

**1970-ஆம் ஆண்டு, புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் பங்கேற்றார் கலைஞர். பிரதமர் முன்னிலையில் மாநில சுயாட்சி குறித்துப் பேசிய அவர், 'சேலம் இரும்பு உருக்கு ஆலை இடம் பெறாத நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள இயலாது' என கடுமையாகக் கூறினார். கலைஞரின் இந்த வாதம் குறித்து அப்போது எழுதிய 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஏடு, "அவர், துடிப்புடன், புதுத் திட்டங்களுடன் பெரிய குறிக்கோள்களுடன் தன்னம்பிக்கையுடன் செயல்படுகிறார்" என புகழ்ந்து எழுதியது.**

## திராவிட இயக்க இதழ்கள் - 'சமநீதி'



**சோ**சலிஸ்ட் கட்சியின் தமிழ்நாட்டுத் தூண்களிலே ஒருவராகத் திகழ்ந்தவர் ஈரோடு மு.சின்னசாமி. முத்தமிழறிஞர் கலைஞர் மீது பற்றுக் கொண்டிருந்த அவர் தொடங்கிய இதழ்தான் 'சமநீதி'. இது வார இதழாக வெளிவந்தது.

1964 - ஆம் ஆண்டு வாக்கில் வெளிவரத் தொடங்கியிருக்கிறது, இந்த இதழ். பிறகு, இந்த இதழை 1966-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். வாங்கி, சிறப்பாசிரியராக இருந்து நடத்தினார். அதில்தான் 'என் காதலி' என்ற தொடரையும் அவர் எழுதினார்.

இந்த இதழில், கவிஞர் தமிழ்ஒளி, கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் எழுதியிருக்கின்றனர். காசி ஆனந்தன் எழுதிய சிறுகதைகள் முதன்முதலில் இந்த இதழில்தான் வெளியாகின.

1967- ஆம் ஆண்டு ஜூன் 2 -ஆம் தேதியிட்ட இந்த இதழில், தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது அதிகாரிகளிடம் இருந்த மனநிலை பற்றி, அப்போது முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா சொன்ன அறிவுரை இது...

"நான் பதவி ஏற்றதும் சில போலீஸ் அதிகாரிகள் என்னிடம் வந்தார்கள். 'நாங்கள் தேர்தல் நேரத்தில் நியாயமாகத்தான் நடக்க முயன்றோம்...'' என்றார்கள்.

"நீங்கள் நிரந்தரமான அரசு ஊழியர்கள். நாங்கள் மக்கள் அனுமதிக்கிற வரையில் அமைச்சர்கள். இரண்டு பேருக்குமுள்ள தொடர்பைத் தெரிந்து வைத்திருக்கிறேன். ஒரு துளியும் கவலைப்படாமல் பணியாற்றுங்கள் என்றும் கூறினேன். எவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு நாங்கள் நடந்து வருகிறோம், என்பதைத் தெரிவிக்கவே இதைக் கூறினேன். யாரையும் பழிவாங்கும் நோக்கம் எங்களுக்கில்லை.

முன்பு ஆட்சியிலிருந்தவர்களின் தூண்டுதலின் பேரில், ஒரு உயர் போலீஸ் அதிகாரி, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது, நமது நாவலர் நெடுஞ்செழியனிடம் தொலைபேசி மூலம், 'என்ன... உங்கள் அண்ணாதுரை தற்கொலை செய்து கொண்டாராமே?' என்று கேட்டார்.

நாவலர் நெடுஞ்செழியன் நெஞ்சு பதைபதைத்து 'அப்படி ஒன்றுமில்லையே' என்று பதில் கூறியிருக்கிறார்.

'இல்லை... ஏதாவது ஆக்சிடென்ட் நடந்ததா? ஆள் போய்விட்டார் என்று கூறுகிறார்களே?' என்று அந்த அதிகாரி கூறியிருக்கிறார்.


உடனே நாவலர், என்னை தொலைபேசியில் அழைத்து போலீஸ் அதிகாரி சொன்னதைச் சொன்னார்.

"அவர்கள் இப்படிக் கேட்பதில் திருப்தி அடைந்து கொள்ளட்டும்'' என்றேன் நான்.

இப்போது அந்தப் போலீஸ் அதிகாரி இருக்கிறார். ஆனால், அவர் மீது ஈ உட்காருவதைக் கூட நான் அனுமதிக்க மாட்டேன்". என அண்ணாவின் இந்த உரையாடலை பதிவு செய்துள்ளது 'சமநீதி' .

இந்த இதழ் எப்போது நின்றது என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஆனால், கிடைக்கும் தகவல்படி 1980-களின் இறுதி வரை வந்திருக்கலாம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம் 231




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131